எழுத்தின் புறத்திலக்கணமாகிய மொழியியல் உணர்த்தப்போந்த பவணந்தியார் முன்னைத் தமிழ் நூல்களிலில்லனவற்றைத் தாமே பகுபதம் பகாப்பதமென முன்னர் நாட்டி அதனை யுணர்த்தும் அவ்வியற்குப் பதவியலெனப் பெயர்தந்து அதன்கண் பொதுவெழுத்தானும் சிறப்பெழுத்தானுமாகிய ஆரிய மொழிகள் திரிந்து தமிழ் மொழியுள் வடசொல்லாமாறு வடமொழியாக்கத்தினையுமுடன் கூறிச் செல்கின்றார். இவ்வியலில் பவணந்தியார் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனப் பகுபதத்தை ஆறாகப் பிரித்து ஒரு மொழியிலக்கணங் கூறியுள்ளார். இங்ஙனமிவர் வடமொழியிலக்கணத்தினை ஆதரவாக வைத்துக்கொண்டு பதவியல் விதி கூறியதற்கு இவர் காலத்தும் அதற்கு முன்னரும் ஆரியர்கள் தமிழ்நாட்டிற் புகுதலால் அவர் தம் பழக்கவொழுக்கங்களும் தமிழ்நாட்டாரால் மேற்கொள்ளப்பெற்று ஆரியச் சொற்கள் அளவு கடந்து தமிழ் நூல்களுட் புகுந்து பாழ்படுத்தினமையே பொருந்திய காரணமாகும்.

இனி, தொல்காப்பிய வெழுத்ததிகார விதிகளும், அவற்றோடொற்றுமையுடையனவும் மாறுபட்டனவுமாய நன்னூலெழுத்ததிகார விதிகளும் இயைத்துரைக்கப்படும். இதன்கண் தொல்காப்பியச் சூத்திரங்களெல்லாம் தமிழெண்களாலும், அவற்றின் பின்னரெடுத்துக் காட்டப்படும் நன்னூற் சூத்திரங்களெல்லாம் இக்காலத்துப் பழகும் ஆங்கில வெண்களாலும் குறிப்பிடப்படும்.

நூன்மரபு

'இவ்வதிகாரத்தாற் சொல்லப்படும் எழுத்திலக்கணத்தை ஓராற்றாற் றொகுத்துணர்த்தலின் நூன்மரபு என்னும் பெயர்த்து' என இளம்பூரணரும், 'இத்தொல்காப்பியமெனும் நூற்கு மரபாந்துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்துணர்த்தினமையின் நூன்மரபென்னும் பெயர்த்தாயிற்றென நச்சினார்க்கினியரும் இவ்வியலின் பெயர்க் காரணம் கூறினர். 'இவ்வதிகாரத்துட் கூறும் எழுத்திலக்கணத்தினைத் தொகுத்துணர்த்தலாற் பெற்ற பெயராயின் அதிகாரமரபெனப்படுவதன்றி நூன்மரபெனப்படாமையானும், இவ்வதிகாரத்துட் கூறப்பட்டன செய்கையோத்திற்கும் பொருளதிகாரத்துள் செய்யுளிய லொன்றற்குமே கருவியாவதன்றி மூன்றதிகாரத்துக்கும் பொதுவாகாமையானும் அவை போலியுரையாதலறிக, என இருவருரையும் மறுத்த சிவஞானமுனிவர்,

"நூன்மரபு: அஃதாவது நூலினது மரபுபற்றிய பெயர் கூறுதல். எனவே இதுவு மிவ்வோத்துட் கூறுஞ் சூத்திரங்களுக்கெல்லா மதிகாரமென்பது பெறப்பட்டது. மலை கடல், யாறு என்றற் றொடக்கத் துலக மரபு பற்றிய பெயர்போலாது ஈண்டுக் கூறப்படும் எழுத்து, குறில், நெடில், உயிர், மெய், என்றற் றொடக்கத்துப் பெயர்கள் நூலின்கண் ஆளுதற்பொருட்டு முதனூலாசிரியனாற் செய்துகொள்ளப்பட்டமையின், இவை நூன் மரபுபற்றிய பெயராயின எனக்கொள்க" என இவ்வோத்தின் பெயரியை புரைத்தார்.

இவ்வோத்திற் கூறப்படும் எழுத்துக்களின் பெயர் முதலியவனைத்தும் தொல்காப் பியனார்க்கு முற்காலத்தவரான பண்டைத் தமிழ்ச் சான்றோர் நூல்களிற் சொல்லப்பட்ட எழுத்தியல் மரபுகளாய் ஆசிரியர் தந்நூலின் ஆளுதற்பொருட்டு எடுத்துக்கொள்ளப்பட் டன என்பது இவ்வோத்தினிலக்கணங்களை 'என்ப' 'புலவர்' 'மொழிப' 'என்மனார் புலவர்' என்ற சொற்களான் முன்னையோர் கருத்தாக ஆசிரியர் கூறுதலான் விளங்கும்.

க. எழுத்தெனப்படுப
அகரமுத
னகரவிறுவாய்முப்பஃதென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங்கடையே

இஃது எழுத்துக்களின் பெயரும், முறையும் தொகையும் கூறுகின்றது.

(இதன்பொருள்) எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன அகரமுதல் னகர மீறுகக் கிடந்த முப்பதென்று சொல்லுவர் ஆசிரியர். சார்ந்து வருதலைத் தமக்கிலக்கண மாகவுடைய மூன்றுமல்லாத விடத்து என்பதாம்.

சார்ந்து வருதலைத் தமக்கிலக்கணமாகவுடைய மூன்றும் சொல்லிடைநோக்க எழுத்தாமாயினும், தனியே நிற்கு மாற்றல் பெற்றனவல்லவாதலின், தம்மியல் குன்று வாறு தனியே நிற்றல் காரணமாக எழுத்தெனச் சிறப்பித்துச் சொல்லப்படும் முப்பதனோடும் சேர்த்துரைக்கப் பெறுவாயின.

சார்பெழுத்தின் இயல்புணர்த்துவார் 'சார்ந்துவரன் மரபின் மூன்' றென்றார். யாதாயினும் ஒன்றினைச் சார்ந்து வருதலையே தமக்குரிய இயல்பாகவுடைய மூன்று மென்றவாறு. எனவே இம்மூன்றும் ஏனையெழுத்துக்களைப்போன்று தனியே எடுத் துரைக்கப்படா நிலைமையவென்பது போதரும். இவ்வாறே நன்னூலாரும்

58. "மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே"

என்பதனால் மொழிக்கு முதற்காரணமாய் அணுத்திரளின் காரியமாய்வரும் ஒலியாவது எழுத்து அது முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும் இருவகையினையுடைத்து எனக்கூறி, எழுத்தெனச் சிறப்பித்துச் சொல்லப்படும் உயிரும் மெய்யுமாகிய முப்ப தெழுத்தினையும் தனியே இசைத்தல் பற்றி,

59. "உயிரு முடம்புமா முப்பது முதலே"

என்பதனால் முதலெழுத்தெனப் பெயரிட்டுரைத்தார்.

அகரம் முதலிய முப்பதும் நெடுங்கணக்கினுட் பெறப்படுதலின் அவற்றை விதந் தோதாது அகரமுதல் னகரவிறுவாய் என முதலு மிறுதியு மெடுத்தோதினார். இங்ஙனம் கூறலான் அகரமுதலாக னகரமீறுக வழங்குதலே எழுத்தினது முறையாம் என்பது பெறப்படும். இதனை மேற்கொண்டே

"சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண்டம் முதல்
நடத்த றனே முறையாகும்மே"

என நன்னூலினும் எழுத்துக்களின் முறை கூறப்பட்டது. 'முப்பஃதென்ப' என்பதனல் எழுத்தின் தொகை கூறினர்.

உ. அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகர
மாய்தமென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோரன்ன

இது மேற் சார்ந்துவருமென்ற மூன்றிற்கும் பெயரும் முறையுங் கூறுகின்றது.

(இ-ள்) மேற்சார்ந்து வருமெனப் பட்டவைதாம் குற்றியலிகரமும் குற்றியலுகரமு மாய்தமென்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளிவடிவுமாம். அவையும் முற் கூறிய முப்பதெழுத்திேனாடு ஒரு தன்மையாய் வழங்கும் எ-று முற்கூறிய விரண்டும் உம்மை தொக்கு நின்றன. ஒரு மொழியைச் சார்ந்து வருமியல்பன்றித் தனித்தியங்கு மியல்பு தமக்கில வென்றலின் அவை தம்மை யெடுத்தோதிக் காட்டலாகாமையின் அவற்றிற்குக் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என வேறுவேறு பெயரிட்டு ஈண்டெடுத்தோதினர். அவை தனித்தொலிக்கப் பெறுவாயினும் மொழியோடு சார்த்தி யிசைக்கப்படுதலின் எழுத்தென்றற்கு ஒருவகையானுரிய வென்பார், எழுத்தோரன்ன என்றார். முற்றியலுகர இகரங்களோ டிவற்றிடை வேற்றுமை தெரிதற்பொருட்டு இகாமுகர மென்றெழியாது குற்றிய லிகரம் குற்றியலுகர மென்றார்.

புணர்ச்சி வேறுபடுதலின் இகரவுகரங் குறுகி நின்றனவென்றும், சந்தனக்கோல் குறுகினல் பிரப்பங் கோலாகாதவாறுபோல் உயிரது குறுக்கமும், உயிரேயாமென்றும், இவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும்பற்றி வேறோரெழுத்தாக ஆசிரியர் வேண்டினரென்றும் கூறுவர் நச்சினர்க்கினியர்.

ஒரு மாத்திரையாய் நின்ற குற்றெழுத்துக்களே, ஈரொற்றுடன் நின்று கான் மாத்திரை பெற்ற மகரக்குறுக்கம்போல, செயற்கையான் அரைமாத்திரை பெற்றுக் குறுகி நின்றன என உலக மலையாமைப்பொருட்டு இவை யிங்ஙனமாதலியல்பென்பார் குற்றிகரம், குற்றுகரம் என்றெழியாது ஆசிரியர் குற்றியலிகரம் குற்றியலுகரமெனக் குறிப்பிட்டாரெனவும் 'குற்றியலிகரம் நிற்றல்வேண்டும்,' குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே நிற்றல் வேண்டுமெனவுங்கூறி இவைபற்றி மாத்திரை குறுகுமெனக்கூறிற் றிலரெனவும் 'ஆயிரு மூன்றேயுகரம் குறுகிடன், 'யகரம் வரும் வழி யிகரம் குறுகும்' என்புழி வரும் குறுகுமென்னுஞ்சொல் "கோயின் மன்னனைக் குறுகினள் சென்றுழி, நீங்கிற்றெறூஉங் குறுகுங்காற்றண்ணென்னும், என்புழிப்போல அணுகுதற் பொருண் மைத்தெனவும் கூறிக், குற்றியலுகரமும் ஆய்தம்போல வேறெழுத்தேயாவதன்றி ஒரு மாத்திரையாய் நின்ற இகர உகரங்களே மகரக்குறுக்கம் முதலியனபோல ஒரு காரணம்பற்றி யரை மாத்திரையாய் நின்றனவல்ல எனச் சிவஞான முனிவர் விருத்தி யில் விளங்க உரைத்தார்.

ஆயினும் 'ஆயிரு மூன்றேயுகரங் குறுகிடன்' என்புழியும் 'யகரம் வரும் வழி யிகரங்குறுகு'மென்புழியும் வந்த குறுகுமென்ற சொல்லிற்கு அவர் கூறியவாறு அணுகுமெனப் பொருள் கூறின் முறையே அவ்விரு தொடரும் அவ்வறுவகைச் சொல்லும் உகரம் வருமிடம் எனவும், யகர முதன்மொழி வருமொழியாய் வருமிடத்து ஆண்டு இகரம் வரும் எனவும் பொருள்பட்டு அவ்வாறு வருவன முற்றிகர முற்றுகரமே எனத் திரிபு புணர்ச்சி தோன்றிக் குற்றியலிகரம் குற்றியலுகரம் கொள்ளப்படா ஆகலின் அவ்விகர வுகரங்கள் தன் மாத்திரையிற் குறுகி அரைமாத்திரை பெறு மென்பதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. குற்றியலிகரம் குற்றியலுகரம் என்பன குறுகுதலை யியல்பாகவுடைய இகர உகரமென்றே பொருள்படுமாகலின் அவை அவ்வொலி வேற்றுமை காரணமாக வேறெழுத்தெனக் கொள்ளப்படுதலும், இகரவுகரங்களின் தொடர்புடைமை காரணமாக அது தள்ளப்படாமையும் நன்கு விளங்கும்.

ஆய்தமென்பதைப்பற்றி நச்சினார்க்கினியர் பின்வருமாறு கூறுவர் :—ஆய்தமென்ற ஓசைதான் அடுப்புக்கூட்டுப்போல மூன்று புள்ளி வடிவிற்றென்பதுணர்த்தற்கு "ஆய்த மென்ற முப்பாற்புள்ளியும்" என்றார். அதனை இக்காலத்தார் நடுவுவாங்கி யிட் டெழுதுப. இதற்கு வரிவடிவு கூறினார். ஏனையொற்றுக்கள்போல உயிரேறுது ஓசை விகாரமாய் நிற்பதொன்றாகலின். எழுத்தியல் தழா ஓசைகள்போலக் கொள்ளினும் கொள்ளற்க என்றற்கு எழுத்தேயாமென்றார். இதனைப் புள்ளிவடிவிற் றெனவே ஏனை யெழுத்துக்களெல்லாம் வரி வடிவினவாதல் பெற்றாம்'' என்பதாம். இதன்கண் ஆய்தம் மூன்று புள்ளி வடிவிற்றென்பதும் நச்சினார்க்கினியர் காலத்திலுள்ளார் சிலர் அதனை நடுவே வளைந்த கோடிட்டு வழங்கினார்கள் என்பதும், ஆய்தம் ஏனை யொற்றுக்கள்போல உயிரேறுது நிற்பதொன்றென்பதும் புலப்படுதல் காணலாம்.

நடுவுவாங்கியிட்டெழுதுப என்பது 8-ம் நூற்றாண்டில் பல்லவ மல்லன் காலத்ததாக அமைந்த காசாகுடிப் பட்டயத்துள் 'வெஃகா' என்ற சொல்லின் ஆய்தம் 'வெ꞉கா' என்று மேலும் கீழும் புள்ளியும் இடையில் வளைந்த கோடும் உடையதாக வரையப்பட் டிருப்பது ஆராயத்தக்கது.

வேதத்திலே ஜிஹ்வா மூலியத் தொனி பெறுவதோரெழுத்துக்கு 'ஆஸ்ரதம்' என்ற பெயரை வேத இலக்கணம் இட்டு வழங்குவதென்றும், அத்தகைய உச்சரிப் புடன் அஃகம் முதலியனவாகத் தமிழில் வழங்கும் எழுத்துக்கும் தமிழிலக்கணம் வகுத்த ஆதியிருடிகள் அவ்வடசொல்லை ஆய்தமெனத் திரிய வழங்கினராதல் வேண்டு மெனவும் பின்வருமாறு கூறுவர் சிலர். "ஆய்தம் முப்புள்ளியென்பதற் காதரவில்லை. ஆயதம் என்ற வடசொற்கு நீண்டது என்பது பொருள் என்பவாகலின் ஈண்டு நீண்ட கோடுளதெனல் பொருந்தும். [பலவகை வடிவுகளைக் கூறுமிடத்து நன்னூற் பழைய உரைகாரர் மயிலைநாதர் :—சதுரம் ஆயதம் வட்டம், முக்கோணம் சிலை என்றிவற்றைக் குறிப்பிட்டுள்ளார்] இவற்றுள் இவ்வாயதமும் ஒன்றாய் நீண்டவடிவினைக் குறித்தல் காண்க. இதனால் நீண்ட கோடுள்ளதாய்ப் புள்ளி பெறுதலான் அவ்வாயதமே ஆய்த மென்றும் ஆய்தப்புள்ளி என்றும் வழங்கலாயிற்றுப்போலும். பல்லவ சாசனத்துக்கண்ட

இவ்வாய்த வடிவைப்போலவே வடமொழி விசர்க்கத்துக்கு மேலும் கீழு மமைந்த இரட்டைப்புள்ளி வடிவேயன்றி (÷) என இடைக்கோடு வளைவின்றியும் பின் பாண்டிய சாசனமொன்றில் காணப்படுகிறது ஈண்டு ஒப்பிடத்தக்கதாம். ஆகவே அச்சொல்லின்மூலம் ஆஸ்ரதமாயினும் ஆய்தமாயினும் அவ்வெழுத்துக்கும் விசர்க்கத்துக்கும் ஒலிவடிவும் வரிவடிவும் ஒன்ருகவே ஆசிரியர் காலத்தில் அமைந்திருந்ததென்பதும், முப்பாற் புள்ளியினதாகிய அது மிகப் பிற்காலத்தேதான் எழுதப்பட்டதென்பதும் மேற்கூறியவற்றினின்றும் பெறப்படும்" என ஏலாதன கூறுவரொருசாரார்.

முதலில் ஆய்தம் முப்பாற் புள்ளியினதாகக் கருதப்பட்டது எக்காலத்தென நோக்குவோம். 'குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தமென்ற முப்பாற் புள்ளியும்' என்ற தொடர்க்கு உரைகூறப்போந்த இளம்பூரணர் குற்றியலிகரமும் குற்றியலுகரமு மாய்தமென்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளியும் இவை எனக்கூறிக் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என்னும் எண்ணும்மை விகாரத்தாற் ருெக்கன எனச் சிறப்புரையுங் கூறினர். மூன்றனுள் முன்னின்ற இரண்டிற்கு எண்ணும்மை விகாரத்தாற்ருெக்கன எனவே ஈற்றதாகிய ஒன்றன்கண் தொகாது நிற்கிறதென்பது கொள்ளப்படும். சூத்திரத்தில் அவ்வாறு உம்மை தொகாது நிற்குமிடம் 'ஆய்தமென்ற முப்பாற்புள்ளியும்' என்பதில் புள்ளியென்பத னீற்றிடமே என்பது விளங்கும். எனவே முப்பாற் புள்ளியென்பது ஆய்தமாதல் வேண்டும். ஆய்தமென்ற முப்பாற் புள்ளி யென்பதில் ஆய்தமென்பதன்கண் உம்மை இல்லாதிருக்க, ஆய்தமுமென உரையிற் காணப்படுதல் ஏடெழுதுவோர் பிழையாதல் வேண்டும். இதனல் முப்பாற் புள்ளி யென்பது ஆய்தத்தின் வடிவை உணர்த்திய தென்பது உரையாசிரியர் உரையாலும் சிறப்புரையாலும் நன்கு தெளியப்படும். இதனைத் தழுவியே நச்சினர்க்கினியரும் உரை கூறினமை முற்கூறப்பட்டது. இகரமும் உகரமும் என உம்மை தொக்கதாகக் கொள்ளாமல் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என அம்மூன்றும் புள்ளி பெறுதல் பற்றிப் பொதுப் பெயராக முப்பாற் புள்ளியும் என்றும் எனச் சிவஞான முனிவர் கூறியது கொண்டு, அவர் தமக்கு ஆய்தம் முப்புள்ளி வடிவிற்றன்றெனல் கருத்தென்பதும் பொருந்தாது. அன்றியும் அவர் கூறியபடி மூன்றும் புள்ளி பெறுதல் காரணமாக முப்பாற் புள்ளியெனப்பட்டமையின் எகரவொகரம் புள்ளி பெறுதல் காரணமாகப் புள்ளியென வழங்கப்படாமையானும், குற்றியலுகரம், குற்றியலிகரம் புள்ளிபெறுமெனத் தொல்காப்பியர் கூருமையானும், குற்றியலுகரம் மொழியீற்றின்க ணல்லது புள்ளி பெருமையானும், அறிகுறியாக வரும் புள்ளியையுடைய ஈற்றுக் குற்றியலுகரத்தின் பிற வடிவுகளிருக்க மொழிமுதற் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆகிய இவற்றிற்குப் புள்ளியெனப் பொதுப் பெயரிடுதல் சாலாதாகலானும், ஆய்தத்திற்கு முப்பாற் புள்ளி யல்லது வேறு வடிவின்மையானும், குற்றியலிகர உகரத்தினை யாண்டும் புள்ளி என்ற பெயரால் எடுத்தாளாமல் மெய்யோடியைதல் முதலாக உயிரியல்பில் வைத்துரைத்தலானும், பொருந்தாது என்பது. எனவே ஆய்தம் மூன்று புள்ளி வடிவிற்றென்பது உரையாசிரியர் நச்சினர்க்கினியர் உரைகளான் ஆசிரியர் தொல்காப்பியனர்க்குடன்பாடென்பது பெறப்பட்டது. பின்னருமாசிரியர் ஆய்தப் புள்ளியென இதன் பெயருரைத்தலும் ஆய்தம்

புள்ளிவடிவிற்றென்பதை வலியுறுத்தும். மூன்று புள்ளி வடிவிற்று யெழுதப்பட்டு வந்த ஆய்தம் ஃ என இடைக்காலத்தாரால் இடையே வளைத்தெழுதப்பட்டதென்பது 8-ம் நூற்றுண்டிற் பல்லவமல்லன் சாசனமாகிய காசாக்குடிப்பட்டயத்துள் வெஃகா என்ற சொல் வெஃகா என எழுதப்பட்டு வருதலானும், நச்சினுர்க்கினிய ருரையானும் நன்கு விளங்கும். ஒரு சிலராலிங்ஙனம் ஆய்தம் இடையே வளைத்தெழுதப்பட்டாலும் பெரும்பாலார் மூன்று புள்ளி வடிவினதாகவே எழுதி வருகின்றமை உலகறிந்தது.

வடமொழியில் ஜிஹ்வாமூலியத்தொனி பெறுவதோ ரெழுத்து ஆஸ்ரதம் என வழங்கப்படுதல்கொண்டு தமிழ்ச்சார் பெழுத்தாகி ஓரொலியின் பெயராகிய ஆய்தம் அதன்றிரிபென்று கோடற்கு யாதோரியையும் இல்லை. வடமொழி ஆஸ்ரதம் என்ற உருவமும் அச்சொற் பொருளும் அப்பெயருடைய எழுத்தியல்பும் வேறு. தமிழில் ஆய்தமென்ற சொல்லுருவும் அதன் பொருளும் அப்பெயருடைய எழுத்தினொலியும் வேறு. இவ்விரு வேறுபட்ட சொல்லின் உருவம், பொருள் இயல்பு வேறுபட்டனவாக எவ்வித இயைபுமில்லாமல் வடசொல்லாகிய ஆஸ்ரதம் என்பது ஆய்தமாய்த் திரிந்ததென்றல் எவ்வாற்றுனும் பொருந்தாததாகும். பலவகை வடிவுகளைக் கூறப்போந்த மயிலைநாதர் நீண்ட வடிவென்பதனை ஆயதம் என வடசொல்லாற் கூறுவதுகொண்டு நீண்ட வடிவும் ஓசையுமின்றிப் புள்ளி வடிவிற்றுகிய ஆய்தம் அவ்வாயதமென்ற வடசொல்லின் திரிபாகுமென்றல் என்ன பொருத்தமோ? விளங்கவில்லை. நச்சினுர்க்கினியர் தம் காலத்தார் இடையே வளைத்தெழுதுவார் என்றபடியே 'வெஃகா' எனப் பிறை வடிவமாக எழுதப்பட்டதனை நீண்ட கோடுளதாய்ப் புள்ளி பெறுமெனத் திரித்துக்கொண்டு பாண்டிய சாசனமொன்றில் '⁝' என மேலுங்கீழும் புள்ளியையுடைய இருபுள்ளி வடிவாகிய வடமொழி விசர்க்க எழுத்தானது எழுதுவோர் பிழையால் இடையே ÷ என்றபடி வெட்டுக்கோடு விழுந்ததனை இயற்கை யெழுத்தாக வைத்து அதனை யிடையே பிறை வடிவாக வளைத்தெழுதிய கோடுள்ள ஆய்தத்தோடு ஒப்புமைகாட்டி ஆயதம் என்ற வடசொல்லே ஆய்தமாகத் திரிந்ததெனவும் அவ்விசர்க்க ஒலியே ஆய்தவெழுத்தெனவும் கூறுவது எவ்வித இயைபுமின்றி முரணுதலுங் காண்க.

1. முதலில் நீண்ட வடிவத்தைக் குறிக்கும் ஆயதமென்ற பெயர் வடமொழி விசர்க்கத்துக்கு வழங்குதலும், அவ்விசர்க்கத்திடையே நீண்ட கோடிட்டு எழுதுதலும் வடமொழி யிலக்கணங்களிலேயே சொல்லப்படவில்லை. அதனுல் ÷ என விசர்க்கம் இடையே கோடுபெற்றுக் காணப்படுதல் வடமொழி யிலக்கணத்தொடு பொருந்தாத பிழைவடிவாதல் உண்மை.

2. இரண்டாவது இடைக்காலத்துச் சாசனமொன்றில் ஆய்தம் ஃ என வழங்கப்படுதலை நீண்டவடிவு என்ற பொருள் புலப்படும்படி ஆயதமென்ற பெயராற் குறிப்பிடுதல் சாலாது. எனவே ஃ என எழுதப்பட்டுவரும் வடிவும் இடைக்காலத்தில் ஃ என நடுவு வாங்கியிட்டெழுதிய வடிவும் ஆய்தம் மூன்று புள்ளியாக வேனும் இடைவளைந்த கோடிட்டேனும் எழுதப்பட்டதென்பதனை விளக்குமன்றி அங்ஙனம் எழுதப்படாத இரு புள்ளியாகிய விசர்க்க வடிவோடொக்குமென்றல் பொருந்தாததா மென்ப தொருதலை.

3. மூன்ருவதாகத் தமிழ்மொழிச் சார்பெழுத்தினுள் ஒன்ருகிய ஆய்தம் உயிரே ருது ஓசை விகாரமாய்க் குற்றெழுத்தின் முன்னதாய் உயிரோடுகூடிய வல்லெழுத்து ஆறன்மேலதாய் அவற்றிடையே வருமியல்பிற்றென்பது,

"குறியதன்முன்னர் ஆய்தப்புள்ளி
உயிரொடுபுணர்ந்த வல்லாறன் மிசைத்தே"

என்ற சூத்திரத்தாற் றெளிக்கப்பட்டது. வடமொழி விசர்க்கமோ உயிரோசை யல்லது ஒலியாவியல்பிற்ருய் உயிரை யடுத்து அவற்றிற்கேற்ற உயிரோசைத்தாய் நின்று மேற்கூறிய நியதியின்றி கடைக்கண்ணும் நின்ருெலிக்கு மியல்புடையது. தமிழ்ச் சார்பெழுத்தாகிய ஆய்தம் குற்றெழுத்தின் பின்னதாய் வல்லின மெய்யின் முன்னின்று அதன் ஓசையை மென்மைப்படுத்தி நுணுகிய ஓசைத்தாய் நிற்றலும், வடமொழியில் விசர்க்கம் பெரும்பான்மையும் மெய்முன்னில்லாத உயிரையடுத்து அதன் ஓசைத்தாய் ஒலித்தலும் கடைசியில் க ப மெய்யின்மேல் நின்றும் பிறவற்றின்முன் அவ்வோசை யிற்றிரிந்தும் ஒலித்தலும் இவ்விரண்டிற்குமுள்ள முரணுதலால் ஒலியாலிரண்டும் ஒத்ததென்றல் செவிகருவியாக ஓசையை நுனித்துணரும் நுண்ணுணர்வினுர்க் குடன் பாடன்றெனக.

மேற்காட்டிய மூன்று காரணங்களாலும் தமிழ் ஆய்தவெழுத்தும் வடமொழி விசர்க்கமும் தம்மிற் பெரிதும் வேறுபட்ட இரு ஓசைகளென்பது சிற்றிலக்கணம் பயில் வார்க்கும் தெரியுமியல்பிற்ருதல் வெளிப்படை.

இதுகாறும் கூறியவாற்ருல் ஆய்தம் மென்னும் பெயர் 'ஆஸ்ரதம்' அல்லது 'ஆயதம்' என்றவற்றின் திரிபல்ல வென்பதும், வடமொழி விசர்க்கத்திற்கும் இதற்கும் வடிவானும் இயல்பானும் ஒலியானும் நிலையானும் வேறுபாடு மிகுதியுமுளவென்பதும் விளக்கப்பட்டன. இதனுல் ஆய்தமென்ற எழுத்தொலி தமிழிற்கேயுரிய சிறப்பொலி என்பதும் விளக்கப்பட்டது. ஒலியியல் புணராதார் ஆய்தத்தை 'ஹ' எழுத்தொலியாக இனிக் கருதுவாருளரெனினும் அது மெய்யீருய் மொழிமுதனின்று உயிரேறி நிற்கு மியல்பறிந்து மயக்கம் நீங்குவாராக.

ஆய்தம் என்ற பெயர் தமிழாயின் அதன் பெயர்க்காரண மென்னவெனின் ஆசிரியர் மொழிகளெலாம் காரணமுடையவாயினும் அதன் காரணம் வெளிப்படத்தோன்ரு என்ருர். 'ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயிஞன்கும் உள்ளதன் நுணுக்கம்,' என்ரு ராகலின் இச்சொல் ஆய்தலென்ற உரிச்சொல்லடியாகப் பிறந்து ஆய்தமென்ருகி நுணுகிய ஓசையுடைய எழுத்தென்ற பொருளில் வழங்கியிருத்தலும் கூடும் என உய்த் துணரலாம்.

இங்ஙனம் தொல்காப்பியனுர் சார்ந்துவரு மெழுத்து மூன்றென்ருராக, பவணந்தி யார் தந்நூலுள் தொல்லாசிரிய ருரைத்த சார்பெழுத்தென்றதன்கண் உயிர்மெய் அளபெடை முதலியனவுஞ் சேர்த்து

60. உயிர்மெய் யாய்த முயிரளபொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்

என்பதனாற் சார்பெழுத்துப் பத்தெனக்கூறி

61. உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுயராய்தம்
எட்டுயி ரளபெழு முன்றொற் றளபெடை
ஆறேழஃகுமிம் முப்பானேழ்
உகரமாறு றைகான் மூன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்தமிரண்டொடு சார்பெழுத்துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப"

என்பதனால்

உயிர்மெய்	216
முற்றாய்தம்	8
உயிரளபெடை	21
ஒற்றளபெடை	42
குற்றியலிகரம்	37
குற்றியலுகரம்	36
ஐகாரக்குறுக்கம்	3
ஔகாரக்குறுக்கம்	1
மகரக்குறுக்கம்	3
ஆய்தக்குறுக்கம்	2
ஆக, சார்பு	369

என விரித்துக் கூறியுள்ளார்.

"முதலெழுத்தாந்தன்மை அவற்றிற்கின்மையானும் சார்பெழுத்திற்றோன்றுதலானும் இப்பத்துஞ் சார்பாகவே கொள்ளவேண்டு மென்பது" என மயிலை நாதரும், "உயிர்மெய் உயிருமெய்யுங் கூடிப்பிறத்தலானும், ஆய்தம் உயிர்போல அலகுபெற்றும் மெய்போலப் பெறாதும் ஒரு புடையொத்து அவற்றினிடையே சார்ந்து வருதலானும், ஏனைய தத்தம் முதலெழுத்தின் திரிபு விகாரத்தாற் பிறத்தலானும் சார்பெழுத்தாயின வெனக்கொள்க" எனச் சங்கர நமச்சிவாயப் புலவரும் காரணங் கூறிச் சென்றனர்.

ஆசிரியர் தொல்காப்பியனார் குற்றியலிகரம் குற்றியலுகர மென்ற மூன்றையும் சார்பெழுத்தினுளடக்கியது. இவை யாதானு மொருசொல்லைச் சார்ந்து வரினல்லது தம்மில் தனியே ஒலித்து நிற்கும் இயல்பின்றி ஒன்றினைச் சார்ந்து வரும் இயல்பு

பற்றியேயாம். ஆசிரியர் "சார்ந்து வரினல்லது தமக்கியல்பிலவெனத் தேர்ந்து வெளிப் படுத்த வேனை மூன்றும்" என ஈகல் விளக்கிப்போதலாலும் இவற்றியல்பு தனியே வரவியலாது ஒன்றனைச் சார்ந்து வருதலே யென்பது புலனும். எனவே தன்னியல்பின் நிற்றலாற்ருதனவாய் மொழியைச் சார்ந்துவரு மியல்புடைய எழுத்துக்களே சார்பெழுத் தாதல் தொல்லாசிரியர் துணிபென்பது தேற்றம்.

ஈண்டு நன்னூலாராற் சார்பில் சேர்க்கப்படும் உயிர்மெய்யெழுத்துக்கள் உயிரும் மெய்யுமென வேறு நின்ற விடத்தும் தனியே நிற்றற்குரிய முதலெழுத்தாய் நிற்ற லானும், உயிருமெய்யுங்கூடி நிற்றல் பொருளுணர்த்தும் பொருட்டன்றித், தனியே நிற்றலாற்ருத் தன்மை பற்றியன்ருகலானும், உயிருமெய்யுமாகிய முதலெழுத்துக்களி ரண்டும் ஒன்றுபட்ட நிலையில் அக்கூட்டத்தினை யுணர்த்திய பெயரே உயிர்மெய் என்பதன்றி முப்பதெழுத்தினும் வேறுபட்ட எழுத்தொலிகளை அப்பெயர் குறித்த தென்றல் வழக்கன்மையானும், மெய்யும் உயிருங்கூடுதலாகிய கூட்டம்பற்றி வேறு பட்டதெனின் 'மெய்யோடியையினும் உயிரியல் திரியா' என்றதற்ருெடக்கத்து விதிகள் வேண்டப்படாமையானும் முதலெழுத்துக்களின் வேருகவைத்து உயிர்மெய்யை (உயிரேறியமெய்யை)ச் சார்பெழுத்தென்றல் பொருந்தாதென்க. இனி உயிரளபெடை யினை மூவளபிசைக்கும் வேறெழுத்தாகக் கொண்டு சார்பெழுத்து ளடக்குதலும் பொருத்தமற்றதாம். என்னை? ஆசிரியர் தொல்காப்பியனுர் அளபெடையினைத் தனியே ஓரெழுத்தெனக் கொண்டிலரென்பது.

> "மூவளபிசைத்த லோரெழுத்தின்றே"
> "நீட்டம் வேண்டி னவ்வளபுடைய
> கூட்டியெழூஉத லென்மனார் புலவர்"

எனவும் வரும் சூத்திரங்களான் நன்கு புலப்படும். ஓரெழுத்து மூன்று மாத்திரையாக இசைத்தலின்று, ஒலி நீட்சி வேண்டுவோர் அதற்கேற்ற இயல்புடைய எழுத்துக்கூட்டி இசையினை எழுப்பிக் கொள்க என்பதே மேற்காட்டிய சூத்திரங்களின் பொருள். இதனுல் ஓரெழுத்தின் ஒலி நீட்சியை வேண்டுவோர் அவ்வொலியைத் தருதற்குரிய ஒற்றுமையுடைய எழுத்தொலிகளைக் கூட்டிக்கோடலே அளபெடையாமெனப் பெறப்படுதலின் அஃதிரண்டு முதலிய எழுத்துக்களின் கூட்டொலியேயன்றித் தனியே யோரெழுத்தன்றென்பது ஆசிரியர் கருத்தாதலுணர்க. ஒற்றளபெடைக்கு மிஃ தொக்கும்.

எனவே முதலெழுத்துக்களில் இனமுடைய எழுத்துக்களின் வேருகாத அள பெடைகளைச் சார்பெழுத்தினுளடக்குவது இயைபுடைத்தன்று. ஆகவே உயிரள பெடை ஒற்றளபெடையாமிவைகளையும், எழுத்தெனப்படும் முதலெழுத்துக்கள் புணர்ச்சியிற் பட்டவிடத்து உண்டாம் விகாரங்களாகிய ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் முதலியவற்றையும் பவணந்தியார் சார்பெழுத்தெனச் சார்த்தியுரைத்தல் சார்பெழுத்தி னிலக்கணத்திற்கு முற்றும் மாருதலொருதலை.

ஆசிரியர் சிவஞான முனிவரும் சூத்திர விருத்தியுள் "இனி யிம் மூன்று மேயன்றி உயிர்மெய் முதலியவற்றையுஞ் சார்பெழுத்தென்பாரு முளராலோ வெனின்" எனவினு

வெழுப்பிக்கொண்டு "ஆல் என்புழி உயிர்முன்னும் மெய்பின்னும் நின்று மயங்கினாற் போல, லா என்புழி மெய்முன்னும் உயிர்பின்னும் நின்று மயங்கினவேயல்லாது, உயிரும் மெய்யுமாகிய தந்தன்மை திரிந்து வேறாகாமைக்கு "மெய்யோடியையினுமுயிரி யறிரியா" என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களே சான்றாகலான், உயிர்மெய்யாகிய காலத்தும், குறின்மை நெடின்மை என்னும் உயிர்த்தன்மையும், வன்மை மென்மை இடைமை யென்னும் மெய்த்தன்மையும் தன்னியல்பிற் றிரிபு படாமையானும், உடல்மேல் உயிர் வந்தொன்றுதல் பொன்மணிபோல இயல்பு புணர்ச்சி யென்பவாகலானும்,...துணங்கை யென்பது மெய்முதல் உயிரீறு மெய்ம் மயக்கமெனவும் வரகு, என்பது உயிர்த்தொடர் மொழிக்குற்றியலுகரமெனக் கொள்வதன்றி உயிர்மெய்முதல் உயிர்மெய்யீறு, உயிர் மெய்மயக்கம், உயிர்மெய்த்தொடர் மொழிக்குற்றியலுகர மெனக்கொள்ளாமையின் ஒற்றுமை நயம்பற்றி ஒன்றென்பதனல் ஒரு பயனின்மையானும்,...உயிரோடு கூடிய விடத்து வரிவடிவு வேறுபடுதலின் அதுபற்றி "புள்ளியில்லா எல்லா மெய்யும்" என மெய்ம்மேல் வைத்துச் சூத்திரஞ்செய்து வடிவெழுத்திலக்கணங் கூறினானன்றி ஒலியெழுத்திலக்கணம் வேறுபடக் கூறாமையானும், அளபெடை சார்பெழுத்தென வேறாகாமை முன்னர்க் காட்டப்பட்டதாகலானும் ஐகாரக்குறுக்கம் முதலியன ஒரு காரணம் பற்றிக் குறுகியவாகலிற் சிறுமரம் பெருத்துழியும், பெருமரஞ் சிறுத்துழியும் வேறொரு மரமாகாதவாறு போல வேறெழுத்தெனப்படாவாகலானும்.................. அது பொருந்தாதெனமறுக்க. வன்றொடர் மொழிக்குற்றியலுகரம் வல்லெழுத்து வரு வழிக் கான் மாத்திரையாய்க் குறுகுதலின் அதுபற்றி அதனைக் குற்றியலுகரத்தின் வேறென்னுமையின் அவர்க்குமது கருத்தன்று போலு மென்க", எனக்கூறி மறுத்தமை ஈண்டு வைத்துணரற்பாற்று.

௬. அவற்றுள் அ இ உ
எ ஒ என்னு மப்பாலைந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத்தென்ப.

இது, மேல் எழுத்தெனப்பட்டவற்றுள் ஒரு சாரனவற்றிற்குரிய மாத்திரை யளவும் காரணப் பெயரும் உணர்த்துகின்றது.

(இ-ள்) மேற்கூறிய முப்பதெழுத்தினுள் அ, இ, உ, எ, ஒ என்பன வைந்தும் ஓரோவொன்று ஒரு மாத்திரையாக ஒலிக்கும் குற்றெழுத்து என்னும் பெயருடைய என்றவாறு.

குற்றெழுத்து—குறிதாகிய எழுத்து எனப் பண்புத்தொகை, இஃது ஒரு மாத்திரை யாகிய குறுமையோசையாற் பெற்ற காரணப்பெயர். ஓரினப்பொருள்களினுள்ளேயே குறுமை நெடுமை கொள்ளப்படுமாதலின், இக்குற்றெழுத்தினுங் குறைந்து மெய்கள் அரை மாத்திரையாக ஒலிப்பனவாயினும் அவ்வரை மாத்திரையினும் மிக்கொலிப்பன வற்றைத் தம்முட் பெருமையின் மெய்கள் குற்றெழுத்தெனப்படாவாயின என்பர் நச்சினார்க்கினியர்.

௪. ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ என்னு மப்பாலேழும்
ஈரளபிசைக்கு நெட்டெழுத்தென்ப.

இதுவுமது :—

(இ-ள்) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்று சொல்லப்படுகின்ற அக்கூற்று ஏழும் இரண்டு மாத்திரையளவாக ஒலிக்கும் நெட்டெழுத்தென்னும் பெயரின என்று சொல்வர் ஆசிரியர் எ-று.

ஐகார ஔகாரங்கள் குறிய எழுத்தின் நெடியவாதற்குக் குற்றெழுத்தாகிய இனந்தமக்கில்லையெனினும் மாத்திரையொப்புமையான் அவை நெட்டெழுத்தெனப் பட்டன என்பர் உரைகாரர்.

இவ்விரு சூத்திரங்களிலும் ஆசிரியர் அ, இ, உ, எ, ஒ, என்னும் ஐந்தும் குற்றெழுத்தெனப்பெயர் பெறுமென்றும், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னுமேழும் நெட்டெழுத்தெனப்பெயர் பெறுமென்றுங் கூறினர். இவற்றைப் பின்வருஞ் சூத்திரங்களில் எடுத்தாளுதற் பொருட்டு குற்றெழுத்து நெட்டெழுத்து என்ற இவற்றை இப்பெயர்களாற் கூறுதலேயன்றிக் குற்றெழுத்தைக் 'குறியது' (தொல். ௩அ, ௨௨௬, ௨௩௪) என்றும் நெட்டெழுத்தை 'நெடியது' (தொல். ௱௬௰, ௪௱௧.) என்றும் சில இடங்களில் வழங்கியுள்ளார்.

நன்னூலார் :—

64. அவற்றுள்,
அ, இ, உ, எ, ஒ க்குறிலைந்தே ".
65. " ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ நெடில்"

என்ற சூத்திரங்களாற் குற்றெழுத்து, நெட்டெழுத் தென்றவற்றை முறையே குறில், நெடில், எனத்திரித்து வழங்கியுள்ளார்.

இவர் குறில் நெடில் ஆகிய பெயர்களை உயிரெழுத்திற்கும், மெய்யெழுத்திற்கும், உரியனவாகக்கொண்டு, உயிர்க்குறில், உயிர்நெடில் ஆகிய இரண்டனையும் குற்றுயிர் நெட்டுயிர் எனச் சிறப்புப் பெயரிட்டு வழங்குவர். (நன். 126.) மேல் ஆசிரியர் தொல்காப்பியனுர் குற்றெழுத்து நெட்டெழுத்து எனப்பெயர் கூறவந்தவிடத்து அப்பெயர்க் காரணம் விளக்கிய "ஓரளபிசைக்கும் குற்றெழுத்து ஈரளபிசைக்கும் நெட்டெழுத்து என அவற்றின் மாத்திரைகளையும் உடம்பொடு புணர்த்துக் கூறினர். நன்னூலார் எல்லா வெழுத்துக்களுக்கும் மாத்திரை கூறும் பகுதியாகிய எழுத்துக்களின் மாத்திரை இலக்கணம் கூறும்வழி இயைத்துக் கூறியுள்ளார்.

௫. மூவளபிசைத்தல் ஓரெழுத்தின்றே.

மேலே இரண்டு சூத்திரங்களிலும் ஒரு மாத்திரையாக இசைக்கு மெழுத்துக்கள், குற்றெழுத்தெனவும், இரண்டு மாத்திரையாக இசைக்கு மெழுத்துக்கள் நெட்டெழுத்

தெனவும் கூறியவழி மூன்று மாத்திரை யளவாக ஒலிக்கு மோரெழுத்துமுண்டோ என்று ஐய நிகழுமாகலின் அதனையகற்ற எழுந்ததிச் சூத்திரமென்க.

(இ-ள்) ஓரெழுத்தே நின்று மூன்று மாத்திரையாக ஒலித்தலின்று (எ-று).

எனவே பலவெழுத்துக் கூடியவிடத்து மூன்று மாத்திரையும் நான்கு மாத்திரையும் இசைக்கும் என்பர் நச்சினார்க்கினியர்.

இதனால் இயற்கை நிலையிலுள்ள ஒரெழுத்து மூன்று மாத்திரையளவாக ஒலித்தலில்லை யென்பதே ஆசிரியர் கருத்தாதலறியலாம்.

> சு. நீட்டம்வேண்டி னவ்வளபுடைய
> கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்

மேல் ஓரெழுத்து மூன்று மாத்திரையளவாக ஒலித்தலில்லை யெனவே இரண்டு மாத்திரை பெற்ற எழுத்து ஓசையும், பொருளும், காரணமாக நீண்டொலித்தலை வேண்டின், என் செய்வதென்றார்க்கு இதனால் மாத்திரை நீளுமாறு கூறுகின்றார்.

(இ-ள்) இரண்டு மாத்திரை பெற்ற எழுத்து அம்மாத்திரையின் மிக்கொலித்தலை விரும்புவாராயின் அம்மாத்திரையினைத் தருதற்குரிய எழுத்துக்களைக் கூட்டியெழுப்புக என்று கூறுவர் புலவர்—எ-று.

இதனால் நெட்டெழுத்துக்கள் தாமே இரண்டு மாத்திரையின்மிக்கு மூன்று மாத்திரையளவாக ஓசைமிக்கு நில்லா என்பதும், அங்ஙனம் அவை மூன்று முதலாக மாத்திரை நீண்டொலித்தலை வேண்டுவோர் அவற்றிற்கினமொத்த மாத்திரையுடைய எழுத்துக்களைக்கூட்டி யிசைத்தல் வேண்டுமென்பதும் ஆசிரியர் கருத்தாதல் பெறப் படும். அங்ஙனம் கூட்டியெழுப்புமாறு "குன்றிசை மொழிவயின்" (௪) "ஐ ஔ வென்னும்" என்பனவற்றாற் கூறப்படும்.

"அவ்வளபுடைய" எனப் பன்மை கூறியவதனான் ஒத்த ஓரெழுத்தேயன்றி "செறாஅ அய் வாழிய" என்றாங்கு இரண்டெழுத்தினைக்கூட்டி நான்கு மாத்திரை கோடலும் தழுவிக்கொள்ளப்பட்டது. இவ்வாறு நான்கு மாத்திரையாக ஈரளபு பெறுதல் "செய்யுட்களோசை சிதையுங்கால் ஈரளபும் ஐயப்பாடின்றி யணையுமாம்" என மா புராணத்துங் கூறப்பட்டது.

கூட்டியெழூஉதல் என்பதற்கு "கூட்டியெழுப்புக" என முன்னையோருரைத்த வழியே பொருள்கொள்ளாது 'கூட்டியெழுதுக' எனப்பொருள் கொள்வாருமுளர். "எழு" என்ற தன் வினைப்பகுதி அளபு பெற்று நின்றதாகலின் 'எழுதுக' என 'எழுது' என்பதனைப் பகுதியாய் வைத்துரைத்தல் பொருந்தாது. அன்றியும் இரண்டு மாத்திரை பெற்ற எழுத்து ஓசை குன்றுவதான சொற்கள் மூன்று மாத்திரையாய் நின்று ஓசை பெறவேண்டின் அதனோடு ஒத்த குற்றெழுத்து அதன் பின்னர் நின்று அதன் ஓசையை நிறைவிக்கும் என்ற அளபெடைச் சூத்திரத்தோடு மாறுபட்டு வரி வடிவில் இனவெழுத்தை அறிகுறி அளவாகக்கூட்டி எழுதுதலொன்றே ஓசை நீடற் குரிய வழியாம் எனப் பொருள்தந்து ஆசிரியர் கருத்தை மயங்கவைப்பதாதல் ஒருதலை,

எ. கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறே.

இது மேல் எழுத்தெனப்பட்டவற்றுள் குற்றெழுத்து நெட்டெழுத்து எனப்பெயர் கூறிய வழி உடம்பொடு புணர்த்தலான் அவற்றளபாக மாத்திரையும் கூறப்பட்டதாகலின் இயைபுபட்டமை கருதி மாத்திரை யின்னதென அதன் அளவு கூறுகின்றது.

(இ-ள்) கண்ணிமைத்தலும், நொடியோசையும், ஆகிய அவையே மாத்திரைக்கு அளவாகும். இது நுண்ணிதாக ஓசை யியல்பினையுணர்ந்த ஆசிரியர் கண்டநெறி எ-று.

ஈண்டு இமையென்றது இமைத்தற்றொழிலை யெனவும் நொடியென்றது நொடியிற் பிறந்த ஓசையை எனவும் உரைகாரர் சிறப்புரை கூறுவர்.

கண்ணிமைத்தலும் நொடியோசையுமிங்கு இயற்றமிழாசிரியர் எழுத்தோசையி னெல்லையாக அமைத்துக்கொண்ட ஓரளவிற்கு (ஒரு மாத்திரைக்கு) அளவாதல் கூறப்பட்டது.

பின்னர் மெய் முதலியவற்றிற்கு அரையளவு எனக் கூறப்படும் அளவு இதனிற் பாதியாதலும், மகரக்குறுக்கம் முதவியவற்றிக்குக் கூறப்படும் அளவு இப்பாதியிற் பாதியாதலுமுணர்க.

சார்ந்து வருதலின்றித் தனியேவரும் அகரமுதல் னகரவிறுதியாகவுள்ள முப்பதெழுத்தின் தொகையினை முதற் சூத்திரத்துக்கூறி உ-ல் சார்பெழுத்தின் பெயரும் முறையுங்கூறிய ஆசிரியர் ௩, ௪-ல் குற்றெழுத்திவையெனவும் நெட்டெழுத்திவை யெனவும் அவற்றின் மாத்திரை யிவ்வளவெனவுங்கூறிப் போந்து, ரு-ல் ஓரெழுத்தின் மாத்திரை வரையறையையும், ௬-ல் ஓசை குறைந்தால் அதனை நீட்டு முறையினையும் உணர்த்தி, இச்சூத்திரத்தால் அம்மாத்திரையிலக்கணமும் கூறிப்போந்தார்.

இச்சூத்திரத்து வரும் எனவென்பது எண்ணிற் பிரிந்து கண்ணிமையென நொடியென என்றிரண்டிடத்துங்கூடிற்று. அவ்வேயென்பத னேகாரம் இவைபோலப் பிற வெவையும் ஒரு மாத்திரையியல்பினை விளங்க உணர்த்தாவெனப் பிரிநிலை குறித்தது.

இவ்வாறே நன்னூலாரும் எழுத்தொலி யெழுச்சி பலவற்றையும் அளந்து கோடற்குரிய கால அளவினை,

"இயல்பெழு மாந்தரிமை நொடி மாத்திரை" என்பதனல் விளங்க உரைக்குமிடத்து இயல்பாக எழும் மாந்தரது இமைப்பொழுதும் நொடிப்பொழுதும் ஒரு மாத்திரைக்கு அளவாகக் கூறினர்.

இமைத்தற்றொழிலும் நொடியோசையுமாகிய இவையிரண்டும் ஆகுபெயராய்க் காலத்தை யுணர்த்தி நின்றன' என்பார் சங்கர நமச்சிவாயப்புலவர். எனவே இமை நொடி யென்பனவற்றிற்கு இமைப்பொழுதும் நொடிப்பொழுதும் எனப்பொருள் கொண்டு அப்பொழுதினை மாத்திரைக்கு அளவாக்கியுரைப்பதே பொருந்துவதாம்.

அ. ஒளகாரவிறுவாய்ப்
பன்னீரெழுத் து முயிரென மொழிப.

இது முன்னெடுத்துக் காட்டப்பட்ட குற்றெழுத்து நெட்டெழுத்தாகியவற்றைத் தொகுத்து வேறோர் குறியிடுகின்றது.

(இ-ள்) அகர முதலாக ஒளகாரமீறாகக் கிடந்த பன்னிரண்டெழுத்தும் உயிரென்னும் பெயரினையுடையவென்று கூறுவர் எ-று.

அகர முதலானவற்றை முன்னரெடுத்துரைத்தாராதலின் முன்னர் பெறப்பட்டதனையே "ஒளகாரவிறுவாய்" என ஈறொன்றேகூறி வழி மொழிந்தார்.

மெய் பதினெட்டனையும் இயக்கித்தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிர் என்பது ஆகுபெயர்.

கூ. னகரவிறுவாய்ப்
பதினெண்ணெழுத்தும் மெய்யென மொழிப.

இஃது உயிரல்லனவற்றைத் தொகுத்து வேறோர் குறியீடு கூறுகின்றது.

(இ-ள்) ககாரமுதல் னகாரமீறாகக் கிடந்த பதினெட்டெழுத்துக்களும் மெய்யென்னும் பெயரினையுடைய என்று கூறுவர் எ-று.

பன்னீருயிருக்குந் தான் இடங்கொடுத்து அவற்றானியங்குந்தன்மை பெற்ற உடம்பாய் நிற்றலின் மெய்யென்பது உவம ஆகுபெயர்.

மேற் சூத்திரத்து ஒளகாரவிறுவாய் எனக்கூறிப்போந்தாராதலின் ஈண்டு 'னகர விறுவாய்' என்றே கூறினும் ஒளகாரத்திற்கடுத்த ககாரமுதல் என்பது தானே பெறப் படுமாதலிற் கூறாதொழிந்தார்.

அகரமுதல் ஒளகாரமீறும் பன்னிரண்டெழுத்துக்களும் உலகத்து உடலை யியக்கும் உயிர்போல ஏனைப் பதினெட்டு எழுத்துக்களையும் இயக்கித் தாம் அவையின்றி யும் இயங்கும் ஆற்றலுடைமை கண்டு அவை பன்னிரண்டினையும் உவம ஆகு பெயரான் உயிரெனக் குறியிட்டும் உயிரின்றி யியங்கா உலகத்து ஏனையுடல்கள்போல இவையின்றி யியங்காக் ககாரமுதல் னகரவிறுவாய்ப் பதினெட்டெழுத்துக்களையும் அவ் வாகு பெயரான் மெய்யெனக் குறியிட்டும் வழங்கிய பண்டைத்தமிழிலக்கண நூலாசிரியரின் ஒலி நூலறிவு இவ்வுலகத்தெம்மொழியினுங் காணப்படாத தனிச் சிறப் புடையதெனப் பேராசிரியர் பலர் கூறுப.

இவ்வாறு தனித்தியங்கும் ஆற்றலுடையதாய் அவ்வாற்றலில்லாத பதினெட் டெழுத்துக்களை யியக்கியும் வரும் பன்னிரண்டெழுத்தினையும் உயிரெனவும், அவ் வாற்றலில்லாது அவ்வவற்றானியக்கப்படும் பதினெட்டெழுத்தினையும் மெய்யெனவும் முன்னையோர் மொழிப என ஆசிரியர் தொல்காப்பியனார் வேறுபிரித்துக் கூறுமாற்றால் அவர்க்கு முற்பட்ட பண்டைத்தமிழாசிரியர்கள் உடலையியக்கும் ஆற்றலொன்றுண்

டெனக்கொண்டு அதனை யுயிரெனவும், அதனின் வேறாக அதனானியக்கப்படும் உடலை மெய்யெனவுங் குறியிட்டு வழங்கினார்கள் என்பதும் அதனால் உயிர் வேறு உடல் வேறு என்னுங் கொள்கை அவர் தமக்குடன்பாடென்பதும் பெறப்படும்.

உயிர் ஆவி யென்பன ஒரு பொருளன. மெய் உடம்பு என்பன ஒரு பொருட் சொற்கள்.

இவ்வாறே நன்னூலாரும்,

63. அம்முத லீரா றாவி கம்முதல்
மெய்ம் மூவாறென விளம்பினர் புலவர்.

என்பதனால் அகர முதலிய பன்னிரண்டும் ஆவி (உயிர்) எனவும், ககர முதலிய பதினெட்டும் மெய்யெனவும் பெயர் பெறுமென விளக்கினார். இக்குறி யானிட்டதன்று முன்னையோரிட்ட முறைமைத்தென்பார் "விளம்பினர் புலவர்" என்றார்.

ஆவியும் மெய்யும் போறலின் இவ்விருவகை யெழுத்துக்களும் உவமவாகு பெய ராய்க் காரணப் பொதுப்பெயராயினவென்பர் சங்கர நமச்சிவாயப்புலவர்.

௰. மெய்யோ டியையினு முயிரியல் திரியா.

இஃது உயிர்மெய்க்கு அளவு கூறுதல் நுதலிற்றென்பார் உரையாசிரியர்.

(இ-ள்) பன்னீருயிரும் பதினெட்டு மெய்யோடுங்கூடி நின்றனவாயினும் தம் அளவும், குறியும், எண்ணுந்திரிந்து நில்லா எ-று.

உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க் கூட்டத்தினை "மெய்யோடியையினும்" என உயிர்மேல் வைத்துக்கூறியது அவ்வுயிரின் மாத்திரையே இதற்கு மாத்திரையாகக் கூறுகின்றமை நோக்கிப்போலும்" என்பர் இளம் பூரணர்.

உயிர்மெய் யென்னும் பெயர், உயிரும் மெய்யும் கூடி நின்ற நிலையிற் பெற்றதா யினும் அக்கூட்டத்து, மற்றதனோடு இயைதலாகிய வினையினை உயிரின் தனிவினையாக் கிக் கூறியது, தன்னிலையில் தனித்தியங்குந் தன்மை உயிர்க்கேயன்றித் தனி மெய்க் கின்மையின் அவ்வாற்றலில்லா மெய்யோடு சென்று பொருந்துந் தனிச்சிறப்பு உயிர்க்கே உரித்தாதல் கருதியென்க. இங்ஙனம் மெய்யும் உயிரும் கூடிய நிலையினதாகிய உயிர் மெய் யெழுத்துக்கள் மெய்யினளபும் உயிரளபும் பெற்று ஒன்றரை மாத்திரையும் இரண் டரை மாத்திரையுமாக நிற்கவேண்டியன ஒரு மாத்திரையாயும் இரண்டு மாத்திரையாயும் ஒலித்து நிற்றற்குரிய காரணங் கூறப்புகுந்த நச்சினார்க்கினியர் "ஆயின் ஒன்றரை மாத் திரையும் இரண்டரை மாத்திரையுமுடையன ஒரு மாத்திரையு மிரண்டு மாத்திரையு மாயவா றென்னையெனின், நீர் தனித்தளந்துழியும் நாழியாய் அரை நாழி யுப்பிற் கலந்துழியும் கூடி ஒன்றரை நாழியாய் மிகாதவாறுபோல்வதோர் பொருட்பெற்றி யென்று கொள்வதல்லது காரணங் கூறலாகாமையுணர்க" என்று கூறினார். ஒரு நாழி நீரிலே அரைநாழி யுப்பைக் கலந்தால் அஃதொன்றரை நாழியாய் மிகாதவாறுபோல் வதோர் பொருட்பெற்றியை உயிர்மெய் யளவிற்கு உவமை கூறிப்போந்த இதன்கண்

நாழி நீரிற் கலக்கப்பட்ட அரைநாழியுப்பு நீரோடு கலந்து ஒன்றரை நாழியாய் மிகாது ஒரு நாழியளவுட்படுமாயினும் அவ்வரை நாழி யுப்பின் பருமை, ஒரு நாழி நீரிற் கலந்து முன் அவ்வளவு நிறையில்லாத நீர், முன்னிலும் நிறையினுற் பெருகுதல்போல மெய் யின் மாத்திரை உயிரளவிற் பட்டடங்கினும் அக்கூட்டத்துப் பொருட்பெற்றியால் மெய்யினது ஓசையும் எண்ணும் அதனேடு ஒன்றுபட்டு அழியாது. நிற்குமென்பது கொள்ளக்கிடக்கின்றது. உலகத்து உயிர்களின் உடம்பானது, உயிர்வழியா யடங்கி அதன் விரிவுபெற்று நிற்றல்போல, இம்மெய்யெழுத்தும் உயிரெழுத்தளவிற்ருயடங்கி அதனெலியோ டொத்தொலிக்குமென்பது, உயிர்மெய் என்ற நிறையுவமப் பெயரால் நன்கு விளங்கும்.

கக. மெய்யினளபே யரையெனமொழிப.

இது தனி மெய்க்கு அளபு (மாத்திரை) கூறுகின்றது.

(இ-ள்) மெய்யினது அளபு அரை மாத்திரையெனச் சொல்லுவர் புலவர் எ-று.

ஈண்டு அரையெனக்கூறியது முன்னர்க் கண்ணிமை கைந்நொடி யளவாகக் கூறப் பட்ட ஓரளபிற் பாதியினையே. நாச்சிறிது புடைபெயருந்தன்மையாய் நிற்றலின் அவ் வரைமாத்திரையுந் தனித்துக் கூறிக்காட்டலாகாது என்பர் நச்சினுர்க்கினியர்.

கஉ. அவ்வியனிலையுமேனைமூன்றே

இது சார்பிற்ருேற்றத்து மூன்றற்கும் அளபு கூறுகின்றது. (இ-ள்) ஒழிந்த சார்பிற்ருேற்றத்துவரும் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றெழுத் துக்களும் முற்கூறிய அரை மாத்திரையாகிய அவ்வியல்பின்கண்ணே நிற்பனவாம். எ-று.

கங. அரையளபு குறுகல் மகரமுடைத்தே
இசையிட னருகுந்தெரியுங்காலை.

இது மெய்களுள் மகரம் தன் அரை மாத்திரையிற் குறைந்து சிலவிடத்து வரு மென்கின்றது.

(இ-ள்) தன் அரை மாத்திரையினுங் குறுகி வருதலை மகர மெய்யுடைத்து, ஆரா யுங் காலத்து அது வேறெழுத்தினது ஓசையின்கண் சிறுபான்மையாகிவரும் எ-று.

ஆசிரியர் இங்ஙனம் மகரமெய் தன் அரைமாத்திரையினுங் குறுகிவருமெனப் பொதுப்படக் கூறினுர். உரையாசிரியர் இளம்பூரணர் அதன் மாத்திரைச் சுருக்கத் தினை வரையறுத்து எல்லை கூறுதல்வேண்டி "அரையளபு குறுகல் மகரமுடைத்தே" என்பதற்கு "அரையளபாகிய எல்லையிற் குறுகிக்கான் மாத்திரையாதலை மகரமெய் யுடைத்து" என உரையிற் கோடலால் கான் மாத்திரை பெறுமென வரையறை கூறியுள்ளார். இதனைத் தழுவியே நச்சினுர்க்கினியரும் நன்னூலார் முதலிய பின்னூ லாரும் மகரக் குறுக்கத்திற்குக் கான் மாத்திரை யெல்லையாதலை வரையறுத்துக் கூறி யுள்ளார்கள்.

'கால்குறண்மஃகான்'

என்பது நன்னூல் சூத்திரத்தொடர்.

உ-ம். போன்ம், தரும்வளவன், எனவரும்.

கச. உட்பெறு புள்ளி யுருவாகும்மே.

இது பகரத்தோடு மகரத்திடை வேற்றுமை செய்கிறதெனக்கொண்டு உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் "புறத்துப்பெறும் புள்ளியோடு உள்ளாற் பெறும் புள்ளி மகரத்திற்கு வடிவாம்" எனப் பொருளுரைப்பர். இதன்கண் பகரவடிவையும் மகர வடிவையும் சேர்த்தற்குரிய இன்றியமையாமையும், இச்சூத்திரத்தின்கண் அங்ஙனம் சேர்த்து வைத்தார் ஆசிரியர் என்பதற்குரிய சொற்கிடக்கையும் காணப்படாமையான் இச்சூத்திரத்தாற் சுட்டப்பட்ட உண்மைப்பொருள் அதுவெனக்கொள்ளற்கில்லை. ப ம முதலியவற்றின் வரிவடிவு இன்னதெனக் கூறாமலே ஆசிரியர் அவற்றின் வரிவடிவு வேறுபாட்டைக் கூறினாரென்றல் பொருந்தாததாம். அன்றியும் ப ம இவற்றின் வேறுபாடுரைக்கப்போந்த ஆசிரியர் தாம் எவ்வெழுத்துக்களுக்கு வரிவடிவு வேற்றுமை கூறுகின்றாரோ அவ்வெழுத்துக்களிவையென எடுத்துரைத்தன்றிக் கூற மாட்டார். மகரம் மேலைச்சூத்திரத்தாற் பெறப்படினும், அதனோடு வேறுபாடுகூற எடுத்துக்கொண்ட பகரத்தினை இச்சூத்திரத்து எடுத்துரையாமலே அவ்விரண்டிற்கும் வேறுபாடு கூறினாரென்றல் எங்ஙனம் பொருந்தும்?

இனி இச்சூத்திரவரிதனியே ஒரு சூத்திரமாக இருந்திருத்தலியலாது. என்னையெனின்? இதனுட் கூறப்படும் விதி இன்னதற்கென்பது பெறப்படாத நிலையில் இதனை ஒரு சூத்திரமாக ஆசிரியர் வையார். இவ்வரி, பின்வரும் "மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்" என்ற சூத்திரம் மெய்களின் பொதுவியல் புரைத்தலால் அதனைத் தொடர்ந்ததாகாது. எனவே மேலைச்சூத்திரத்தினையே சேர்ந்ததாதல்வேண்டும். ஆகலின் இது மகரத்தோடு மகரக் குறுக்கத்திற்கு வரிவடிவு வேற்றுமை செய்கின்றது என்பதே பொருத்தமுடைத்து.

(இ-ள்) உட்பெறு புள்ளி—புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற் பெறும் புள்ளி, உருவாகும்—மகரக் குறுக்கத்திற்கு வடிவாம் எ-று.

மேலைச் சூத்திரத்து அரைமாத்திரையினின்றும் குறுகி இசையிடனருகி வருமெனப்பட்ட மகரக் குறுக்கத்தினை, அவ்வாறு குறுகாத அரை மாத்திரை பெற்று இயல்பான மகரத்தோடு பிரித்தறிந்து கொள்ளுதற்கு அறிகுறியாக வரிவடிவில் எல்லா மெய்களுக்குமுரிய புறத்துப் பெறும்புள்ளியொடு, இக்குறுகிய மகரமெய்க்கு வரிவடிவில் உள்ளே பெறும் புள்ளியே பொருந்திய வடிவாம் என்பதைக் குறிக்கவே இச்சூத்திரம் மேலைச்சூத்திரத்தோடியைத்துக் கூறப்பட்டது. இச்சூத்திரம் மகரக் குறுக்கத்தைப்பற்றியதாயினும் வரிவடிவு வேற்றுமை கூறுதல் காரணமாக வேறே பிரித்துக் கூறப்பட்டுள்ளது; ஒரு பொருள் நுதலியதே சூத்திரமாதலின் என்க.

7

இதனல் மெய்களுள் ஒன்ருகிய மகரத்தின் குறுகிய நிலையை அறிந்துகொள்வதற் கெனவே அக்காலத்தார், எல்லா மெய்களும் பெறுதற்குரியதாம் தலைப்புள்ளியோடு குறுகிய மகரத்தின் உள்ளேயும் ஒரு புள்ளியை இட்டு வரிவடிவில் அதனைக் குறித்துப் போந்தார்கள் எனக் கொள்ளலாம். ஓசை குறுகிய எழுத்தினைப் புள்ளியிட்டுக் காட்டு முறையுண்டென்பது " மெய்யினெல்லாம் புள்ளியொடுநிலையல் '' என்றதன் விதியைக் " குற்றியலுகரமுமற்றெனமொழிப '' என அடுத்த சூத்திரத்தில் மாட்டெறிந்து ஈற்றுக் குற்றியலுகரமும் மெய்போலப் புள்ளியொடு நிற்கும் எனக் கூறுதலாற் பெறப்படும். இவ்வாறு தன்னியல்பாம் ஒரு மாத்திரையினின்றுங் குறுகி யரை மாத்திரையியல்பில் நிற்கும் குற்றியலுகாம் ஈற்றில் புள்ளிபெறுதல்போலத் தன்னரை மாத்திரையிற் குறைந்த மகரமும் புள்ளிபெறுதல் இயல்பும் முறையுமாகும்.

இவ்வாறே மகரக் குறுக்கம் இயல்பாகிய புள்ளியொடு உள்ளேயொரு புள்ளியை யும் பெறுமென்பதனை வீரசோழியம் சந்திப்படலம் 19-ம் செய்யுளுள் "முன்வயிற் கால்வவ்வரின் '' வருமொழி முதலில் வகரம் வந்து புணர்ந்தால் அந்த மகரமானது குறுகிக்கான் மாத்திரையாய் உட்புள்ளிபெறும் '' எனப் பெருந்தேவனர் உரைகூறிப் போதலானும் நன்கறியலாம்.

கரு. மெய்யினியற்கை புள்ளியொடுநிலையல்

மேல் மகரத்திற்கும் மகரக் குறுக்கத்திற்கும் வரிவடிவு வேற்றுமைக் கறிகுறியாக மகரக் குறுக்கத்திற்கு உட்பெறுபுள்ளி யுருவாகுமென்ருர். ஆண்டுப் புள்ளிபெறுதல் அதிகாரப்பட்டமையின் எல்லா மெய்களுக்கும் பொதுவாகிய புள்ளிபெறுதலை இதனுற் கூறுகின்ருர். இஃது உயிர்மெய்யோடு தனிமெய்யிடை வரிவடிவு வேற்றுமை செய்தல் நுதலிற்றென்பர் உரைகாரர்.

(இ-ள்) மெய்களின் தன்மையாவது புள்ளிபெற்று நிற்றலாம்.

கசு. எகர ஒகரத்தியற்கையுமற்றே

இதுவும் வரிவடிவு வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்) எகர ஒகரங்களினது நிலையும் மெய்போலப் புள்ளிபெறும் இயல்பிற்று.

பண்டைக்காலத்து எ, ஏ ஆகிய குறில் நெடிலிரண்டிற்கும் எ, என்ற வடிவும் ஒ, ஓ ஆகிய குறில் நெடிலிரண்டிற்கும் ஓ என்ற வடிவும் வரிவடிவில் வழங்கப்பட்டன என்றும், அவற்றுள் குறிலிது நெடிலிது என்ற வேறுபாடு உணர்தற்குக் குற்றெழுத் தைக் குறிக்குமிடத்து அவ்விரண்டன்மேலும் புள்ளியிட்டெழுதினர்களென்பதும் இவ்விதியாற் புலனும். இவ்வாறு புள்ளியிடுதல் எகர ஒகரங்களுக்கேயன்றி மெய் யூர்ந்த எகர ஒகரங்களுக்கு முண்டென்பது நந்திவர்மன் (கி. பி. 800—840) 4-ம் ஆண்டில் திருவெள்ளறைக்கிணற்ருென்றில் வெட்டப்பட்டசாசனத்து "நான் காவ தெ்டுத்து", பெ்ருங்கிணறு, செ்ய்து என்ற சொற்களின் மெய்யூர்ந்த எகாங்கள் புள்ளி யிட்டெழுதல் கொண்டறியப்படும்.

மேலையிரண்டு சூத்திரங்களிலேயும் குறிக்கப்பட்ட மெய்களும் எகர ஒகரமும் புள்ளி பெறுதலாகிய விதியை நன்னூலார், எழுத்துக்களின் உருவம் என்ற பகுதியில்

98. தொல்லை வடிவின வெல்லாவெழுத்துமாண்
டெய்து மெகர ஒகர மெய்புள்ளி

என்ற சூத்திரத்தாற் கூறிப்போந்தார்.

எகரமும் ஒகரமும் புள்ளி பெறுதலைப் பின் வரும் மாத்திரைச் சுருக்க அணியமைந்த செய்யுட்களாலும் நன்கறியலாம்.

"நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளிபெற நெருப்பாம்"

"மயிர் நிறுவிமற்றதற்கோர் புள்ளி கொடுப்பின்
செயிர்தீர்மரமாகும் சென்று (நன். சூ. 269. மேற்)

இதன் கண் நேரிழையார் கூந்தல், மயிர் என்பன ஓதி என்று கொள்ளப்படும். அதன்கண் ஒதி எனப் புள்ளி கொடுத்தால் ஒதி என்ற மரத்தைக் குறிக்கும். அவ்வாறே நீர்நிலையென்பது ஏரி. அதனேகரத்துப் புள்ளியிட்டால் எரி என நெருப்பை யுணர்த்தும்.

உருவத்தைக் குறிக்கவந்த நன்னூலார், மகரக்குறுக்கம், குற்றியலுகரம், இவை புள்ளி பெறுமென்று தொல்லாசிரியர் கூறிய வரிவடிவை இறந்தது விலக்கல் என்னும் உத்தியால் கூறாது விலக்கினர்போலும்.

இக்காலத்து எகர ஒகரம் என்பன, மகரக்குறுக்கம் குற்றியலுகரம் என்பன போலப் புள்ளி பெறுதலையொழிந்தன.

௧௭. புள்ளியில்லா எல்லாமெய்யும்
உருவுருவாகி யகரமொடுயிர்த்தலும்
ஏனையுருவோ டுருவுதிரிந்துயிர்த்தலும்
ஆயீரியல வுயிர்த்தலாறே"

இஃது உயிருமெய்யுங் கூடுமாறுணர்த்துகின்றது. (இ-ள்.) எல்லா மெய்களும் புள்ளியில்லை யாம்படியாக தத்தம் முன்னைவடிவே இன்னும் வடிவாகவே அகரத்தோடு கூடி யொலித்தலும் ஒழிந்த உயிர்களோடு வடிவு வேறுபட்டு ஒலித்தலுமாகிய அவ்விரண்டு இயல்பினையுடைய அவை யொலிக்கு முறைமை எ-று.

1. புள்ளியில்லையாதல் தத்தம் முன்னைவடிவே வடிவாக அகரத்தோடுயிர்த்தல், க, ங, ய, எனவருதல்.

2. ஏனையுயிரோடு உருவு திரிந்து வருதலாவது "மேலுங்கீழும் விலங்குபெற்றும் கோடுபெற்றும், புள்ளிபெற்றும், புள்ளியுங்கோடுமுடன் பெற்று முயிர்த்தலாம். கி, கீ, முதலியன மேல் விலங்கு பெற்றன. கு, கூ, முதலியன கீழ் விலங்குபெற்றன

கா, ஙா, முதலியன புள்ளி பெற்றன. "அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார்காலாக எழுதினர்" கொ, கோ, ஙொ, ஙோ, என்பன புள்ளியுங் கோடும் உடன் பெற்றன என்பர் நச்சினார்க்கினியர். இங்ஙனந் திரிந்தொலிப்பவே உயிர்மெய் பன்னிருபதினெட்டிரு நூற்றெருபத்தாறுயிற்று.

"உயிர்மெய் யென்பதனை" ஒற்றுமை கொள்வழி உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையெனவும், வேற்றுமை கொள்வழி உம்மைத் தொகை யெனவுங் கொள்க" என்பர் இளம்பூரணர். ஆசிரியர் உயிர்மெய்யென்பதனை வேற்றுமை நயங்கருதியே கூறுகின்றாராகலின் "உம்மைத் தொகையெனக் கொண்டார் நச்சினார்க் கினியர். சூத்திரத்தில் 'இல்லாக' என்பது 'இல்லா' என நின்றது என்பர் இளம் பூரணர்.

இங்ஙனம் மெய்யுயிரோடுகூடி ஒலிக்கும் நிலையில் உயிரளவாயடங்கி நிற்றல் காரணமாக மெய்யோசை ஆண்டுத் தோன்றா தென்பாருமுளர். "மெய்யோடியையினு முயிரியல் திரியா" என்பதனல் உயிர்மெய்க் கூட்டத்துத் திரியா உயிரியல்பினை விளக்கிய ஆசிரியர் அக்கூட்டத்து மெய்கள் உயிரொலி நிறையப்பெற்று அதனோடு அதனளவாய் அதன்முன் ஒலிக்கு மியல்பின என்பதனை இச்சூத்திரத்தாற் கூறுவர்.

கஅ. மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே

உயிரும் மெய்யும் கலந்து உயிரளவாயொலிக்கும்பொழுது அவ்விரண்டனுள் முன்னொலிப்பதெது பின்னொலிப்பதெது என்பதனை இதனுட் கூறுகின்றார்.

(இ-ள்.) மெய்யும் உயிருங்கலந்து உயிரளவாய் ஒலிக்கும்பொழுது மெய்யொலியின் பின்னரே உயிரொலி தோன்றி நிற்குமென்பதாம்.

இதனல் உயிர்மெய்க்கூட்டத்து மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து நிற்றல் கூறப்பட்டது.

இங்ஙனம் ஆசிரியர் தொல்காப்பியனார் வேற்றுமை நயங்கருதி உயிர்மெய்யிலக் கணங் கூறினாராக, நன்னூல் பவணந்தியார் உயிர்மெய் ஒற்றுமை நயங்கருதி ஒரெழுத் தாகக் கொண்டிலக்கணங் கூறுவர்.

89. புள்ளிவிட்டவ் வொடு முன்னுருவாகியும்
ஏனையுயிரோ டுருவு திரிந்தும்
உயிரளவாயதன் வடிவொழித்திருவயிற்
பெயரொடு மொற்று முன்னய் வருமுயிர்மெய்.

மெய் புள்ளியை விட்டு அகரத்தோடு கூடியவழி விட்டவுருவே உருவாகியும், ஒழிந்த உயிர்களோடு கூடியவழி உருவு வேறுபட்டும், தன்மாத்திரை தோன்றாது உயிர்மாத்திரையே மாத்திரையாய், அதன் வரிவடிவினது விகாரவடிவே வடிவாய் உயிர் வடிவை யொழித்து, மெய்யுயிரென்னும் இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய்யென்னும்

பெயருடனே ஒற்றெலி முன்னும் உயிரொலி பின்னுமாய் வரும் உயிர்மெய்யெழுத்து என்பதிதன் பொருள். இதன்கண் உயிர்மெய்யை ஓரெழுத்தெனக்கொண்டு விதி கூறுவதும் அதனைச் சார்பிற்றோற்றத் தோரெழுத்தென அடக்கியுரைப்பதும் உயிர் மெய்யை ஓரெழுத்தாகக் கொண்டனர் பவணந்தியார் என்பதனை வலியுறுத்துகின்றது. இவரே பின்னர் எழுத்துக்களின் முதலீறுரைக்கப் போந்தவிடத்து "நின்றநெறியே உயிர்மெய் முதலீறே" என வேற்றுமை நயங்கருதி விதிகூறிச் செல்லுதலும் நோக்கத்தக்கது.

கக. வல்லெழுத்தென்ப, க, ச, ட, த, ப, ற.

உ0. மெல்லெழுத்தென்ப, ங, ஞ, ண, ந, ம, ன.

உக. இடையெழுத்தென்ப, ய, ர, ல, வ, ழ, ள

இம்மூன்று சூத்திரங்களாலும் மேற்கூறப்பட்ட மெய்களை வன்மை, மென்மை, இடைமையாகிய பிறப்பியற் பிரிவான் வேறுபடுத்துகின்றார்.

வல்லென்றிசைத்தலானும் வல்லென்ற தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத் தெனப்பட்டன எனவும், மெல்லென்றிசைத்தலானும், மெல்லென மூக்கு வளியாற் பிறத்தலானும் மெல்லெழுத்தெனப்பட்டன எனவும், இடைநிகரனவாகி ஒலித்தலானும் இடைநிகர்த்தாகிய மிடறு வளியாற் பிறத்தலானும் இடையெழுத் தெனப்பட்டன வெனவும் உரையாசிரியர் கூறுவர்.

வன்மையுமென்மையும் உணர்ந்தன்றி அவற்றின் இடைப்பட்ட நிலைமை யுணர லாகாமையின் இடையெழுத்தெனப் பிற்கூறப்பட்டது.

வல்லினத்துக் க, ச, த, ப நான்கும், மெல்லினத்து ஞ, ந, ம மூன்றும், இடை யினத்து ய, வ இரண்டும் மொழிக்கு முதலாதல் நோக்கி இம்முறையே வைக்கப்பட்டன வெனவுங் கூறுவர்.

வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என்ற பெயரால் வகைப்படுத்திய வற்றை நன்னூலார்

68. வல்லினங் க, ச, ட, த, ப, ற, வெனவாறே

69. மெல்லினம் ங, ஞ, ண, ந, ம, ன, வெனவாறே.

70. இடையினம் ய, ர, ல, வ, ழ, ள வெனவாறே

என்ற சூத்திரங்களால் முறையே வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் பெயரிட்டு வழங்குவர்.

உஉ. அம்மூவாறும் வழங்கியன் மருங்கின்
மெய்ம் மயக்குடனிலை தெரியுங்காலை.

இது தனிமெய் மயக்கத்திற்குப் பெயர் கூறுகின்றது. (இ-ள்) மேற்கூறியவாறு மூன்று கூறாகப் பகுக்கப்பட்ட பதினெட்டு மெய்களும் தம்மை மொழிப்படுத்தி

வழங்குமியல்புளதாகுமிடத்து மெய்மயக்கென்றும் உடனிலையென்றும் இருவகையாம் ஆராயுமிடத்து எ-று.

"உயிர், மெய், உயிர்மெய், என்னும் மூன்றினையும் உறழ்ச்சிவகையான் உறழ ஒன்பது உளவாமன்றே. அவற்றுள் தனிமெய்யோடு தனிமெய் மயக்கம் ஒன்றே கூறியதென்னெனில், மற்றவற்றிற்கு வரையறையின்மையின் வரையறையுடைய தனிமெய்மயக்கமேகூறி யொழிந்தாரென வுணர்க. மெய்யென்றதனால் தனிமெய்யோடு உயிர்மெய் மயக்கமன்றி, தனிமெய்யோடு தனிமெய் மயக்கமாதல் கொள்க" என்பர் இளம் பூரணர்.

உடனிலையை உடனிலை மயக்கமெனக் கூறுவர் இளம் பூரணர். "மெய்ம் மயக்குடனிலை" என்ற இவர் பாடத்தை விடுத்து நச்சினார்க்கினியர் "மெய்ம் மயங் குடனிலை" எனப் பாடங்கொண்டு மெய்மயங்கும் நிலை, உடன் மயங்கும் நிலை என ஈரிடத்தும் மயங்குநிலை என்ற சொற்களைக்கூட்டி "மெய்மயங்கு நிலை = தனிமெய் தன் முன்னர் நின்ற பிறமெய்யோடும் தன் மெய்யோடும் மயங்குநிலையும், உடன் மயங்குநிலை = அப்பதினெட்டும் உயிருடனே நின்று தன் முன்னர் நின்ற உயிர்மெய் யோடும் தனிமெய்யோடும் மயங்கும் நிலையும் என இரண்டாம்," எனப்பொருள்கூறி இச்சூத்திரம் தனிமெய் பிறமெய்யோடும் தன் மெய்யோடும் மயங்கும் மயக்கமும், உயிர் மெய் உயிர்மெய்யோடும் தனிமெய்யோடும் மயங்கும் மயக்கமும் கூறுகின்ற தெனக் கருத்துரைப்பர். இவர்க்கு முன்னவராய இளம்பூரணர் கொண்ட 'மெய்ம்மயக்குடனிலை'. என்ற பாடமே தொன்மை கருதி ஏற்றுக் கொள்ளப்படுவதாகலானும், உயிர்மெய், உயிர்மெய்யோடும் தனிமெய்யோடும் மயங்கும் மயக்கத்திற்கு வரையறையின்மை யின் அதற்கு விதி கூறப்படுவதன்றாகலானும் அவர் கூறியவாறு மெய்ம்மயங்குநிலை என்பதனுள் மெய் பிறமெய்யோடும் தன் மெய்யோடும் கலந்து நிற்குநிலை வெளிப்படப் பெறுமையானும், உயிர்மெய்யை உயிரும் மெய்யும் என ஈரெழுத்தாகப் பிரித்து விதி கூறுவார் ஈண்டு ஓரெழுத்தாகக்கொண்டு உரையாராகலானும் உடனிலை யென்பதற்கு உயிருடன் நிற்றல் எனக்கோடற்குரிய சொல்லின்மையானும் இளம் பூரணர் பாடமே ஆசிரியர் கருத்தாதல் பெறப்படும்.

ஆசிரியர் தனிமெய் பிறமெய்யோடு மயங்குநிலை மெய்ம்மயக்கு எனவும், தனி மெய் தன் மெய்யோடு மயங்கி நிற்கும் நிலையை உடனிலையெனவும் இச்சூத்திரத்திற் குறிப்பிட்டுரைத்தார்.

இடைநிற்கும் எழுத்துக்களின் மயக்கம் உணர்த்தப்போந்த நன்னூலார், உயிருட னுயிர்க்கு மயங்குந் தன்மையின்மையின் அதனையொழித்து மெய்யுடன் மெய் மயங்கு தலும் உயிரும் மெய்யும் மாறி மயங்கலுமாகிய இவ்விரண்டினையும் இடைநிலை மயக்கத் தில் உணர்த்த எடுத்துக்கொண்டார்.

110. க, ச, த, ப, வொழித்த ஈரேழன் கூட்டம்
மெய்மயக்குடனிலை ரழவொழித்தீரெட்
டாகும் இவ்விருபான மயக்கும் மொழியிடை
மேவு முயிர்மெய் மயக்களவின்றே.

(இ-ள்) மெய் பதினெட்டனுள் க, ச, த, ப, என்னும் நான்கும் ஒழித்தொழிந்த பதினன்கு மெய்யும், பிறமெய்களோடு கூடுங்கூட்டம் வேற்றுநிலை மெய் மயக்கமாம். ர ழ என்னும் இரண்டு மொழித்தொழிந்த பதினறு மெய்யும் தன்னெடு தான் கூடுங் கூட்டம் உடனிலை மயக்கமாம். இவ்விரண்டு பகுதி மயக்கமும் மொழியிடை வரும். உயிருடன் மெய்யும் மெய்யுடனுயிரும் மாறி உயிரும் மெய்யுமாக மயங்கும் மயக்கத்திற்கு வரையறையில்லை; வேண்டியவாறே மயங்குமென்பதாம்.

இதன்கண் பவணந்தியார் உயிரும் மெய்யும், மெய்யும் உயிரும் மாறி மயங்கு மயக்கத்திற்கு அளவின்றெனக்கூறி இடைநிலையாக மெய்களை ஆசிரியர் தொல்காப்பியனர் கூறியவாறே மெய்மயக்கு, உடனிலை மயக்கம் என இருவகைப்படுத்திப் பெயர் கூறினர்.

இச்சூத்திரத்தான் மெய்மயங்குங்காற் க, ச, த, ப, என்னும் நான்கும் தம்மொடு தாமே மயங்குமெனவும் ர, ழ, வென்னும் இரண்டும் தம்மொடு பிறவே மயங்குமெனவும், ஒழிந்த பன்னிரண்டும் தம்மொடு தாமும் பிறவும் மயங்குமெனவும் பெற்ரும்.

இவ்விருவருங்கூறிய மெய்ம்மயக்கத்தினைப் பிற்காலத்துரையாசிரியர்கள் வேற்றுநிலை மெய்மயக்கெனவும், உடனிலையினை உடனிலை மெய்மயக்கமெனவும் பெயரிட்டு வழங்குவர். மெய்மயக்கு—தனிமெய் முன்னர்ப் பிறமெய் வந்து மயங்கும் (வேற்றுநிலை) மெய்மயக்கம். இதனை ஏழு சூத்திரங்களால் தொல்காப்பியனர் கூறுவர்.

உஙு. ட, ற, ல, ள, வென்னும் புள்ளி முன்னர்க்
க, ச, ப, வென்னு மூவெழுத்துரிய.

(இ-ள்) ட, ற, ல, ள என்ற நான்கு மெய்களின் முன்னர்க் க, ச, த, ப என்னும் மூன்று எழுத்துக்களும் தனித்தனி வந்து மயங்குவனவாம் எ-று.

உச. அவற்றுள்,
ல, ள, ஃகான் முன்னர் யவவுந் தோன்றும்.

(இ-ள்) முற்கூறிய நான்கனுள் லகார ளகாரமாகிய மெய்களின் முன்னர்க் க, ச, ப,-க்களேயன்றி யகாரவகரங்களும் வந்து மயங்கும்.

இவ்விரு சூத்திர விதியையும் நன்னூலார்

113. ட, ற, முன் க, ச, ப, மெய்யுடன் மயங்கும்
117. ல, ள, முன் க, ச, ப. வ, ய, வொன்றும்மே

என்ற இருசூத்திரங்களால் கூறினர்.

உரு. ங, ஞ, ண, ந, ம, ன, வெனும் புள்ளி முன்னர்த்
தத்தம் மிசைக ளொத்தன நிலையே.

(இ-ள்) மெல்லின மெய்களாறன் முன்னரும் முறையே அவற்றவற்றிற்கினமொத்த வல்லினமெய்கள் வந்து மயங்கும்,

உசு. அவற்றுள்
ண னஃகான் முன்னர்க்
க, ச, ஞ, ப, ம, ய, வவ்வேழுமுரிய

(இ-ள்) ணகார னகாரமெய்களின் முன் அவற்றிற்கினமாகிய வல்லினமெய்யே யன்றிக் க, ச, ஞ, ப, ம, ய, வ, ஆகிய ஏழு மெய்களும் வந்து மயங்குவனவாம்.

உஎ. ஞ, ந, ம, வ, வென்னும் புள்ளி முன்னர்
யஃகானிற்றன் மெய்பெற்றன்றே".

(இ-ள்) ஞ, ந, ம, வ, என்னும் நான்கு மெய்களின் முன்னர் யகரமெய் வந்து மயங்கும்.

உஅ. மஃகான் புள்ளிமுன் வவ்வுந்தோன்றும்.

(இ-ள்) மகரமாகிய மெய்யின் முன்னர் பகர யகரங்களேயன்றி வகரமும் வந்து மயங்கும்.

இந்நான்கு சூத்திர விதிகளையும் நன்னூலார்,

111. ங ம்முன்கவ்வாம் வம்முன்யவ்வே
112. ஞநமுன்றம்மினம் யகரமோடாகும்
114. ண னமுன் னினங் கச ஞபமயவவ் வரும்
115. "ம ம்முன்பயவ மயங்குமென்ப

என்ற நான்கு சூத்திரங்களால் குறிப்பிடுவர்.

உகூ. ய, ர, ழ, வென்னும் புள்ளி முன்னர்
முதலாகெழுத்து ஙகரமொடு தோன்றும்.

(இ-ள்) ய, ர, ழ என்னும் மெய்களின் முன்னர் மொழிக்கு முதலாகும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ எனும் ஒன்பது மெய்களும் முதலாகாத ஙகரமெய்யும் வந்து மயங்கும்.

நன்னூலார் முதலாகாத ஙகரத்தை அவ்வையொட்டி முதலாகுமெனக்கொண்டு இவ்விதியை

116. ய, ர, ழ, முன்னர் மொழிமுதன் மெய்வரும்

என்ற சூத்திரத்தாற் சுட்டினர்.

ஆசிரியர் தொல்காப்பியனர் பின்னிற்கும் மெய்களைத்தொகுத்து இவை இவற்றின் முன் மயங்குமெனச் சூத்திரஞ்செய்தலும் நன்னூலார் முன்னிற்கு மெய்களைத்தொகுத்து அவைகளோடு இன்னின்ன மெய்கள் வந்து மயங்குமெனக்கூறலும் இவ்விருவர் செய்த சூத்திரங்களையும் நோக்கிற்புலனும்.

நட. மெய்ந்நிலை சுட்டி னெல்லாவெழுத்தும்
தம்முன் தாம் வரூஉம் ர ழ வ ல ங்கடையே.

இது நிறுத்த முறையானே உடனிலை மெய்மயக்கமாமாறு கூறுகின்றது.

(இ-ள்) பொருள் நிலைமையைக்கருதின் எல்லா மெய்களும் தம்முன் தாம் வந்து மயங்கும்; ரகர ழகரங்களல்லாதவிடத்து எ-று.

மெய்ந்நிலை சுட்டின் என்றதனுல் தனிமெய் முன்னர் உயிரேறிய மெய் வருமெனக் கொள்க. எல்லாமென்றது ரகர ழகர மொழிந்தவற்றை. இவ்வுடனிலை மயக்கத்தை நன்னூலார்

118. ர ழ வ ல் ல ன தம் முற் றுமுட னிலையும்

என்றதனுற் குறிப்பிட்டார்.

௩௧. அ, இ, உ, அம்மூன் றுஞ் சுட்டு.

(இ-ள்) அ, இ, உ, என்று கூறிய அம்மூன்றுஞ் சுட்டென்னுங் குறியினையுடைய எ-று.

இதுவும் இதற்கடுத்த சூத்திரமும் எழுத்தாம் தன்மையின்றி மொழிநிலைமைப்பட்டு நிற்றலின் மொழி மரபினைச்சாரவைத்தார் என்பர் உரைகாரர்.

சுட்டியறியப்படும் பொருளை யுணர்த்தலின் சுட்டென்பது காரணப்பெயர்.

அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன் எனவரும். அ, இ, உ என்ற மூன்றெழுத்தும் மொழி முதலிலே தனியே நின்று சுட்டுப்பொருளை யுணர்த்தி நிற்றல் மேற்காட்டிய உதாரணங்களாற் புலனும். ஆசிரியர் தனியே சுட்டு என்ற பெயரைக் குறிப்பிடும்போதெல்லாம் இம்மூன்றெழுத்தைத் தவிர வேறொன்றையுஞ் சுட்டாமையும் இதனை வலியுறுத்தும்.

இவ்வாறு நன்னூலாரும் அ, இ, உ, இம்மூன்றெழுத்தும் மொழிமுதற்கண் புறத்தே தனித்துச் சுட்டுப் பொருளுணர்த்த்வரிற் சுட்டெழுத்தாமென்பதனை.

66. அ, இ, உ ம்முதற் றனிவரிற் சுட்டே

என்பதனுற் குறிப்பிட்டார்.

இங்ஙனம் ஆ சி ரி ய ர் தொல்காப்பியனுரும் உரைகாரரும் பவணந்தியாரும் மொழிக்கு முதலிற் றனித்துச் சுட்டுப் பொருளுணர்த்திவரும் அ, இ, உ என்ற இம் மூன்றனையுமே ஈண்டுச் சுட்டெனப் பெயர் கூறினராகப் பின்வந்த நன்னூலுரைகாரர் "முதலெனப் பொதுப்படக் கூறினமையாற் புறத்தும் அகத்தும் வருதல் பெற்றும்" எனக்கொண்டு அவர் கூறிய தனிவரின் என்றதனையும் நோக்காது "அவன் என்பதன் அகரம், அறம் என்பதன்கண் அகரம் போலப் பின்னெழுத்துக்களோடு தொடர்ந்து நின்று ஒரு பொருளே யுணர்த்தாது மலையன் என்பதன்கட் பகுதி போல வேறு நின்று சுட்டுப் பொருளுணர்த்தலின் அகத்துவரும் இதனையும் தனிவரின் என்றூர்" என அமைதி கூறி அவன் இவன் உவன் என்ற பெயரையும் உதாரணங் காட்டினர். அவர்கள் அகத்து வருவதாகக் கொண்ட இதன்கண் சுட்டெழுத்தும் சுட்டப்படும் பொருளும் அக்கொற்றன் என்ற விடத்துப்போல வேறு நில்லாது ஒரு பெயர்ப்பட்டு

நிற்றலான் அ, இ, உ முதலிய எழுத்துக்கள் இதன் முதற்கண் மலையன் என்பதன்கட் பகுதிபோல பிளவுபட்டுத் தனியே நின்றன வெனக்கொள்ளல் பொருந்தாது. ஆசிரியர் தொல்காப்பியனார் சுட்டு என்ற பெயரினை அ, இ, உ என்ற எழுத்துக்களுக்கே இட்டு வழங்கினார். அவையடியாகப் பிறந்த பெயர்களைச் 'சுட்டுப் பெயர்' எனக் குறிப்பிட்டுச் சொல்லதிகாரத்து வழங்குவர். (சொல், கிளவி. சூ. சம, சக)

அவன், இவன், உவன், அவள், இவள், உவள்,
அவர், இவர், உவர், அது, இது, உது,
அஃது, இஃது, உஃது, அவை, இவை, உவை.
அவ், இவ், உவ்.

என்றாங்கு பல திறப்படுத்திப் பெயரியலுள் வழங்கியுள்ளார். அ, இ, உ, என்பனவற்றைக் குறிக்கும்போது சுட்டு என்ற சொல்லை வழங்கியும், அது, அவ் முதலியவற்றைக் குறிக்கும்போது சுட்டு முதலுகரம் சுட்டு முதலாகிய வகரவிறுதி, என்று கூறிச் சுட்டடியாகப் பிறந்ததெனக் குறிப்பிட்டும் சொல்லுதல் நோக்கத்தக்கது.

௩௨. ஆ, ஏ, ஓ அம்மூன்றும் வினா.

இது நெட்டெழுத்தென்றவற்றுட் சிலவற்றிக்கு வேறோர் குறியீடு கூறுகின்றது.

(இ-ள்) ஆ, ஏ, ஓ என்ற மூன்றும் வினா என்னும் பெயரினையுடையன. எ-று.

வினாப்பொருளுணர்த்தலின் வினாவாயிற்று. உண்கா, உண்கே, உண்கோ எனவரும். ஆசிரியர் ஈண்டு ஆ, ஏ, ஓ, என எழுத்தாம் நிலைமையில் நின்று வினாப்பொருள் உணர்த்தி வரும் மூன்றனையும் வினாவெனக் குறியிட்டுரைத்தார். சொல்லாம் நிலைமையில் நின்று யாவன், யாவள், யாவர், என உயர்திணைக்கண்ணும் யாது, யா, யாவை, யென அஃறிணைக்கண்ணும் பெயராகவும், உயர்த்திணைக்கண் யார் எனவும், அஃறிணைக்கண் எவன் எனவும் வினாவினைக்குறிப்பாயும் வருவனவற்றை முறையே சொல்லதிகாரத்துப் பெயரியல் வினையியல் இவற்றிற் கூறிப்போந்தார். எவ்வயின் எதோளி, என எகர முதலாக வயின் என்பதும் இகர விகுதியும் ஒட்டியொருசொல் நீர்மைப்பட்டு இடப்பொருளுணர்த்தி இங்ஙனம் வினாவாய் நிற்கும் இடைச்சொற்களை வினாவெனத் தழுவினார் (எழுத்து கருடு, கடுசு). இவை சொன்னிலைமைப்பட்டு வினாப்பொரு ளுணர்த்தி நிற்றலின் எழுத்தாம் நிலைமையில் நின்று ஈண்டுப் புணர்ச்சிக்கட்படும் ஈற்று வினாவாகிய ஆ, ஏ, ஓ, என்றவற்றுள் இயைத்துரைக்கப்படாவாயின.

கஎஉ. "என்றறிசொன்முன் யாதென் வினாவிடை"
கஎடு. "யாவென்வினாவுமாயியல் திரியாது"
கஎஅ. "யாதென் வினாவி னையெனிறுதி"

என இவ்வதிகாரத்தும் வினாவெனக் கொண்டு, யாவன், யாவள், யாவர், யா, யாவை, எனப் பெயரியற்கண்ணும்.

"யாஅரென்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே" (வினை. உகடு)

"அத்திணை மருங்கினிருபாற் கிளவிக்கும்
ஒக்குமென்ப எவனென் வினாவே (உகசு)

என வினையியற்கண்ணும் எடுத்துரைத்தமையால் வினச்சொல்லை வினப்பெயர், வினு வினைக்குறிப்பு என இருவகைப்படுத்தினரென்பதறியலாம். ஈண்டுக் குறிப்பிட்ட ஆ, ஏ, ஓ, மூன்றும் இருதிணையைம்பாற் பெயரிறுதிகளோடுஞ் சேர்ந்து வினப் பொருளுணர்த்தி நிற்றலும், சொன்னிலைப்பட்டுவரும் யாவன் முதலிய பெயரும், வினுவினைக்குறிப்பும், அவ்விருதிணையுள் ஒன்ருய் ஒருபாற் பொருளின்கண் நிற்றலுங் கொண்டு, இவை பொருளானும் வேறுபாடுடைய என்பது அறியப்படும். இனி எவ்வயின் எதோளி முதலியவை எகரத்தை முதலாகக்கொண்டு வரினும் இகரவிகுதியும் பெற்று ஒரு சொல்லாய் நின்று இடப்பொருளுணர்த்தி வினுவாய் வருதலின் இடைச் சொல்லாயின.

இனி இளம்பூரணர் இச்சூத்திரத்தில் "தன்னினமுடித்தல் என்பதனல் எகரமும் யகர ஆகாரமும் வினப்பெறுமெனக்கொள்க". எனத் தழுவிக்கொண்டார். இக்கருத்தே பற்றி நன்னூலாரும்.

67. எ, யா, முதலும் ஆ, ஓ, ஈற்றும்
ஏயிருவழியும் வினுவாகும்மே.

எனச் சூத்திரஞ் செய்தனர்.

(இச்சூத்திரத்தில் ஆசிரியர் பவணந்தியார் வினுவாக வருமெனக் கூறிய ஆ, ஏ, ஓ ஆகிய ஈற்று வினுவில் ஏமுதலினும் வருமெனக் குறிப்பிட்டது, எது என்பது முதலாக வரும் பிற்காலத்து வழக்கு நோக்கியாதல் வேண்டும்).

இவர் கூறியவாறு எகரம் வினுவாய் வருமென்ருல் அ, இ, உ என்றவற்றைச் சுட்டெனக் குறிப்பிட்ட ஆசிரியர் எகரத்தையும் வினவென அடக்கிக் கூறியிருப்பர். உயிர்மயங்கியலில் அ, இ, உ என்றவற்றிற்கு அவ்வவ்வீற்றின்கண் புணர்ச்சி விதிகூறிய ஆசிரியர், எகரம் தனி நின்று வினப்பொருளுணர்த்துமாயின் அதனையும் எகர வீற்றுள் எடுத்துக்கூறிப் புணர்ப்பர். அவ்வாறெடுத்தோதாமையானும் "சுட்டுமுதல் வயின் என்ருற் போல 'எகர முதல்வயின் என எழுத்தே பற்றிக்கூறி எகரம் இகரம் முதலியவைகளோடு கூடி ஒரு சொல்லாகிய நிலையிலேயே, அவ்விடைச் சொல்லை வினு வெனக் குறிப்பிட்டுச் சேறலானும் எகரமொன்றே மொழிமுதலிற்றனித்து நின்று வினப் பொருளுணர்த்திற்றென்றல் தொல்காப்பியனுர்க்குடன்பாடன்று.

இனி அஃறிணைப்பன்மைப் பெயராய் நின்று வினப் பொருளுணர்த்தும் யாவென் னும் பெயரினை மொழி முதலினின்றும் வினப்பொருளுணர்த்தும் எழுத்தாகக்கொண்டு, இரு திணையைம்பாற் பெயரினும் வினையினும் பின்னின்று வினப்பொருளுணர்த்தும் எழுத்துக்களோடியைத் துரைத்தல் பொருந்தாது. அன்றியும் யாவொன்றனை வினு வெழுத்தாகக்கொண்டு அதனேடு துவ்விகுதியும் வைவிகுதியும் சேர்ந்து யாது, யாவை என வாயிற்றெனக் கொள்ளின் யாஎன்பதனை, அஃறிணைப்பன்மைப் பெயராகக்கொண்ட

தொல்காப்பியனுர் கருத்தோடு முரணி யாவென்பது ஐம்பாற்கு முரித்தெனப் பொருள் படுதலானும் ஐம்பாற்குமுரிய யாவென்பது இலக்கியங்களிலும் வழக்கிலும், அஃறிணைப் பன்மைப் பொருளுணர்த்தி நிற்றலானும் ஆசிரியர் கருத்தஃதன்றெனக.

இனி, எ, என்பதனைத் தனியேவரும் வினவெழுத்தாகக்கொண்டு எப்பொருள் என நின்றும் உயர்திணைக்கண் அன்விகுதிபெற்று எவன் என்று ஆண்பாலுணர்த்தியும் நிற்கு மெனக் கொள்வோர் பிற்காலத்துரையாசிரியர்கள்.

" எப்பொருளாயினும் " என்ற தொல்காப்பியச் சூத்திரத்தொடர்க்கு எகரத்தைத் தனியே வந்த வினவெழுத்தாகப் பிரித்து " எந்தப்பொருளாயினும் " எனப் பிற்காலத் தார்போலப் பொருளுரையாது " யாதானு மொருபொருளையாயினும் " எனச் சேனு வரையர் கூறிப்போதலால் யாதுபொருளாயினும் என்பதே எப்பொருளாயினு மென ஒரு மொழியாய்த் திரிந்து நின்றதென்பது அவர் கருத்தாதலறியலாம்.

எவன் என்ற வினு உயர்திணைக் குரித்தன்றென்பதை " அஃதேல் நுமக்கிவன் எவனும் " என உயிர்திணைக்கண்ணும் வருமாலெனின்—ஆண்டு அது முறைபற்றி நிற்றலின் அஃறிணைக்கண் வந்ததெனவே படுமென்பது :—அஃதேல் நுமக்கிவன் என்ன முறையனும் என்பதல்லது, என்ன முறையாம் என்பது பொருந்தாதெனின் என்ன முறையென்பது ஆண்டுமுறைமே னில்லாது ஒற்றுமை நயத்தான் முறையுடையோன் மேனிற்றலின் அமையுமென்க " என வினவிடைகளான் வற்புறுத்தினுர். ஈண்டு எவன் என்பது அஃறிணையிருபாற்குமுரிய வினவினைக் குறிப்பாம். அஃறிணை வினு வாய் வரும் எவன் என்னும் வினைக்குறிப்புச் சொல்லே அத்திணைக்கட் பெயராகவும் ஆசிரியர் காலத்திற்குப்பின் வழங்கத்தொடங்கியது. இப்பெயர்ச்சொல் " இன்சொலினி தீன்றல் காண்பானெவன்கொலோ—வன்சொல் வழங்குவது " எனத் திருக்குறளிலும் வழங்குகிறது. இதைப்பற்றி ' எவனென்பதோர் பெயருமுண்டு ; அஃதிக்காலத்து என் னென்றும் என்னையென்றும் நிற்கும் " எனச் சேனுவரையர் கூறுதலால் எவன் என்னும் அஃறிணை வினுப்பெயர் பிற்காலத்து என், என்னை, என்று திரிந்து வழங்கப்பெறும் என்பதும் பெற்ரும். சேனுவரையர் எவன் என்பதனை ஆசிரியர் கருத்தாக வினைக்குறிப் பெனக்கொண்டு அச்சொல் உயர்திணை குறிப்பதன்று என வற்புறுத்திக் கூறினமை யானும், யாவன் என்பது முதலாக உயர்திணை வினுப்பெயரைக் குறிப்பிட்டுச் சென்ற தொல்காப்பியனுர் தங்காலத்து எவன் என்ற வினு உயர்திணை யாண்பாலைச் சுட்டி நிற்குமாயின் அதனைக் கூருதிரார் ஆகலானும் அவர்காலத்து எவன் என்ற சொல் உயர் திணை வினுப் பெயராய்நின்றதன்றென்பது புலனும்.

ஆசிரியர் காலத்துக்குப் பின்னர் யாது யாவை யென்பன முறையே எது, எவை எனவும், யாவன், யாவள், யாவர் என்பன முறையே எவன், எவள், எவர், எனவும் திரிந்து வழங்கியதாதலால் உரையாசிரியரும் நன்னூலாரும், எகரத்தை வினு வெழுத் தாகத் தழுவிக்கொண்டனர் போலும். இங்ஙனம் யாது முதலியவற்றின் யா என்னும் உயிர்மெய் எகரமாகத்திரியும் முறைமைத்தென்பதை யான் யாம் என்பவற்றின் முதல் யகரமெய் கெட்டு ஆகாரம் எகரமாகத்திரிந்து என், எம், என நிற்கும் எனக்கிளந்த

அவற்றின் இயல்பான் உணர்ந்து கொள்ளவைத்தார் ஆசிரியர். ஆதலான் அவ்வியல்பு முறை பற்றியே அச்சொற்களின் யகர ஆகாரம் எகரமாகத்திரிந்ததெனக் கொள்ளல் பொருத்தமுடைத்து.

௩௩. அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார்புலவர்.

இஃது எழுத்துக்கள் முற்கூறிய மாத்திரையின் நீண்டு நிற்குமிடம் இதுவெனக் கூறுகின்றது

(இ-ள்) எழுத்துக்கள் தமக்குச் சொன்ன அளபினைக்கடந் தொலித்தலும் ஒற்றெழுத்துக்கள் அரை மாத்திரையின் நீண்டொலித்தலும் உளவென்பர் ஆசிரியர். அங்ஙனம் உளவாதலும் குரல் முதலிய ஏழிசையோடு பொருந்திய நரம்பினையுடைய யாழினது இசை நூலிடத்தன எனச்சொல்லுவர் புலவர் எ-று.

ஒற்றிசை நீடலு மெனவே முன்னர் அளபிறந்துயிர்த்தலும் என்ற விதி ஒற்றல்லாத வுயிரெழுத்துக்களுக்கென்பது பெறுதும். இசையின் அளவிறந்திசைக்குங்கால் உயிர் பன்னிரண்டு மாத்திரையீருகவும், ஒற்று பதினெரு மாத்திரையீருகவும் இசைக்கு மென்பர் இசை நூலார். அவர் கொள்கையை இயற்றமிழாசிரியராகிய இவர் "பிறநூன் முடிந்தது தானுடம் படுதல்" என்னும் உத்தியாற்றழுவினர். நன்னூலார் இசைநூலிடத்து எழுத்துக்கள் தத்தம் மாத்திரையினைக் கடந்தொலித்தலோடு விளி பண்டமாற்றுதல் முதலியவற்றின் கண்ணும் அவை அங்ஙனமிசைக்கு மெனக்கொண்டு

99. ஆவியுமொற்று மளவிறந்திசைத்தலும்
மேவுமிசை விளி பண்டமாற்றாதியின்

எனச் சூத்திரஞ் செய்தனர்.

இனி இச்சூத்திரத்து ஆதி யென்றமையான் நெற்போர் தெழிக்கும் பகட்டினங் களைத் துரக்குஞ் சொல்லாகிய 'நாவல்' என்பதன் கண்ணும் குறிப்பிசை முறையீடு புலம்பல் முதலியவற்றின் கண்ணும் உயிரும் ஒற்றும் அளபிறந்திசைக்கு மெனக் கொண்டார் பின் வந்த உரைகாரர்.

நச்சினார்க்கினியர் 'அளபிறந்துயிர்த்தலும்' என்னுஞ் சூத்திரத்தில் இசையொடு சிவணிய என்பதற்கு இசைத்தலோடு பொருந்திய நால்வகைச் செய்யுட் கண்" எனப் பொருள் கூறி உயிரும் ஒற்றும் செய்யுட் கண் அளபிறந்திசைக்கு மெனக்கொண்டார். இசையொடு சிவணிய என்ற சொற்றொடர் நரம்பின் மறைய என்பதன் அடைமொழி யாகலின் அது கருத்தன்றென்பது பெறப்படும்.

தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி

பேராசிரியருரை *

வித்துவான் - மு. அருணசலம் பிள்ளை,
தமிழ் ஆசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தொல்காப்பியமென்னும் இயற்றமிழ்ப் பேரிலக்கணப் பெருநூலானது, இடைச் சங்க காலந்தொடங்கி இன்றுகாறும் நின்று நிலவும் ஒப்புயர்வற்ற விழுமியதோர் நூலாகும்[1]. இதுவே, வடமொழிக்கண் வழங்கிவரும் இருக்கு முதலான நான்மறைகட்கும் பாணினியம் முதலான வியாகரணங்கட்கும் முன்னெழுந்ததென்பது முற்காலத்துத் தமிழறிஞர் பலருடைய கருத்தாகும்[2]. இவ்வியல் நூலானது, தெய்வத் திருமுனிவராகிய அகத்தியருடைய மாணக்கர் பன்னிருவருள் தலைவராய் விளங்கிய தொல்காப்பிய முனிவரால்[3] எழுத்து, சொல், பொருளென்னும் மூன்றதிகாரங்களாகவும், ஒவ்வோரதிகாரத்திற்கும் தனித்தனி ஒன்பது இயல்களாகவும் தொகுத்து

---

* பேராசிரியர் உரையென்பது, திரு. S. கனகசபாபதிப் பிள்ளையவர்கள் பதிப்பித்த தொல்காப்பியப் பொருளதிகாரப் பேராசிரியருரைப் புத்தகத்தைக் குறிக்கும். இக்கட்டுரையிலும் கீழ்க்குறிப்பிலுங் காட்டப்படும் பக்க எண்கள் அப்புத்தகத்தின் பக்க எண்களாம்.

1. "கடைச்சங்கத்தாருள் களவியற் பொருள்கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர் இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியமென்றார்." (தொல்-மரபு-பக்-1353 பேர்)

"தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்க முதலாக இன்றுகாறும் உளதாயிற்று." (பக்-1357-பேர்)

2. "நான்கு கூறுமாய் மறைந்த பொருளுமுடைமையால் நான்மறை யென்றார்; அவை, தைத்திரியமும் பௌடிகமும் தலவகாரமும் சாமவேதமுமாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமும் என்பாருமுளர். அது பொருந்தாது, இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராகலின்" (தொல்-பாயிரம்-நச்-உரை)

"ஐந்திர நிறைந்த, தொல்காப்பியனெனத் தன் பெயர் தோற்றி" (தொல்-சிறப்புப்பாயி-பனம்பாரனார்)

3. "அகத்தியர் வழித்தோன்றிய ஆசிரியர் எல்லாருள்ளும் தொல்காப்பியனாரே தலைவரென்பது எல்லா ஆசிரியருங் கூறுப" (பக்-1353-பேர்)

பன்னிருபடலம், வெண்பாமாலைப் பாயிரங்களும் பார்க்க. (தொல்-பொருள்-பக்-1354-பேர்)

இயற்றப்பட்டுள்ளது. இதனால் பண்டைத்தமிழ் மக்களுடைய அரசியல் முறை, போர் செய்யுந்திறன், காதல் மணமுறைகள், இயற்கைப் பொருளாராய்ச்சி, உண்மைப் பொருளுணர்ச்சி, அறநெறி பிறழாதொழுகும் அமைதி, அறிவின் மேம்பாடு, செய்யுளியற்றும் சீர்மை, உரை வகுக்கும் ஆற்றல், தொழிற் பாகுபாடுகள் முதலான ஒழுக்க வழக்கங்கள் பல அறிதல் கூடும். இற்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன்னர், இவ்வரிய நூலைக் கற்றுத்தெளிந்தார் மிகச்சிலரேயாவர். அறிவுந் திருவும் மருவிய குரிசிலாகிய பாண்டித் துரைச்சாமித் தேவரவர்களால் தமிழ்நாடு செய்த தவப்பயனாக நிறுவப்பெற்ற மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலையில் மாணவர்கட்கு இந்நூல் பாடமாக வைக்கப் பெற்றமையாலும், பின்னர், சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களிலும் அவ்வாறே விதிக்கப்பட்டமையாலும் இந்நாளில் இதனைப் பலரும் படித்தறிந்து இன்புறுவாராயினர். இந்நூல் முழுதுக்கும், சில பலபாகங்கட்கும் இளம் பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலான நல்லிசைப் புலவர்களால் அரிதின் ஆய்ந்து எழுதப்பட்ட நல்லுரைகள் வெளிவந்துள்ளன. ஆயினும், அவ்வுரைகள் காலப் பழமையாலும், ஏடு பெயர்த்தெழுதுவோர் கற்போர் கற்பிப்போர் என்னும் இவர்களாலும் பல மாறுதல்கள் அடைந்துள்ளன ஆதலால், அவை நாளடைவில் திருத்தமும் தெளிவும் பெற்று உண்மை வடிவில் புலப்படுதல் இன்றியமையாததாகும்.

சென்ற ஆண்டில் வித்துவான் முடிவு வகுப்பு மாணவர்கட்கு இந்நூலின் ஒரு பகுதியாகிய பொருளதிகாரத்திற் சில இயல்களைப் பாடஞ்சொல்லி வருங்கால், செய்யுளியலிற் பல இடங்கள் புலவர் பெருமக்களால் ஆய்ந்து முடிவு செய்யத்தக்கனவாயும் திருத்தம் பெறவேண்டுவனவாயுங் காணப்பட்டன. அவற்றுட் சிலவற்றை யான் அறிந்த அளவில் ஈண்டு எழுதத்துணிந்தேன். அவை மாணவர்க்கு ஒரு சிறிது பயன்படுதலுடன், புலமையாளர் மேலுமேலுங் கருத்தூன்றி உண்மை தெளிதற்கும் இடந்தருமென நம்புகின்றேன். அவை வருமாறு:—

ஒல்காப் புலமைத் தொல்காப்பியனார், செய்யுளியல் முதற் சூத்திரத்தில், செய்யுட்கு உறுப்பாவன முப்பத்துநான்கெனவும், அவற்றுள், மாத்திரை முதல் வண்ணம் ஈறாகக் கூறப்பட்ட இருபத்தாறும் தனிநிலைச் செய்யுட்கண் ஒன்று ஒன்றனை இன்றியமையாது உறுப்பாகியும், அம்மைமுதல் இழைபு ஈறாகக் கூறப்பட்ட எட்டும் பெரும்பான்மையும் தொடர்நிலைச் செய்யுட்கு உறுப்பாகியும் சிறுபான்மை தனிநிலைச் செய்யுட்கு ஒரோவொன்று உறுப்பாகியும் வருமென்பது தோன்றவும் அவற்றின் பெயரும் முறையுந் தொகையுங்கூறி, பின்னர் 242 சூத்திரங்களால் அவற்றின் இலக்கணங்களைத் தனித்தனியே விரித்துரைக்கின்றார். இதற்கு உரை வகுத்த பேராசிரியரும், இம்முதற் சூத்திரத்தின்கீழ், இவ்வுறுப்புக்களின் பொதுவியல்புகளைச் சிறு சிறு குறிப்புக்களால் ஒருவாறு புலப்படுத்திப் பின்னர்த் தம் மதிநுட்பமும் நூலறிவுந்தோன்ற இவற்றின் சிறப்பியல்புகள் அனைத்தையும் அவ்வச் சூத்திரத்தின் கீழ் எஞ்சாது விரித்தெழுதிச் செல்லுந்திறன் கற்பார்க்கு உவப்பும் வியப்பும் ஒருங்கூட்டி உணர்ச்சியளிப்பதாகும்.*

---

* செய்யுளியற்கு உரையாசிரியர், நச்சினார்க்கினியர் இயற்றிய உரைகளும் உள்ளன.

அவற்றுள் களம் என்னும் உறுப்பிற்கு முதற் சூத்திர உரையில் எழுதப்பட்டுள்ள இலக்கணக் குறிப்பு முதலில் ஆராய்தற்குரியது. "களன்" என்பது முல்லை குறிஞ்சி முதலாயினவும் இரவுக்குறி பகற்குறி முதலாயினவும் உணரச்செய்தல்: மற்றுந் தன்மை முன்னிலை படர்க்கையுமாம்'' என்பது பேராசிரியருரை. பின்னர் இவ் வுறுப்பின் சிறப்பிலக்கணங்கூறிய,

"ஒருநெறிப் பட்டாங் கோரியல் முடியும்
கரும நிகழ்ச்சி யிடமென மொழிப" (பக். 1264)

என்னுஞ் சூத்திர உரையில், ஒருநெறிப் பட்டாங் கோரியல் முடிதலாவது "காட்சியும் ஐயமும் துணிதலும் புணர்ச்சியும் நயப்பும் பிரிவச்சமும் வன்புறையும் என்றின்னோரன்னவெல்லாம் ஒரு நெறிப்பட்டு இயற்கைப்புணர்ச்சி யென்னும் ஓரிலக்கணத்தால் முடிதல். கருமநிகழ்ச்சி யென்பது காமப்புணர்ச்சி யென்னும் செயப்படுபொருள் நிகழ்ச்சி; அஃது இடமெனப்பட்டது. இது வினை செய்யிடம். நிலமாயின முன்னர்த் திணையெனப்பட்டன. காலம் முன்னர்ச் சொல்லும்'' எனக்கூறி,

"எ லுவ சிறாஅர் எம்முறு நண்ப
புலவர் தோழ கேளா யத்தை
மாக்கடல் நடுவண் எண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்கள் தோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்று லெம்மே" (குறுங். 129)

"கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்
நெஞ்சுபிணிக்கொண்ட அஞ்சில் லோதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே" (குறுங். 280)

என்னும் பாடல்கள் இரண்டையும் உதாரணமாகக் காட்டி, இவை பாங்கற் கூட்டமே இடனாக ஒரு வழிப்பட்டு ஓரியலால் முடிந்தன. என அவரே யெழுதியுள்ளார். இவற்றால், இடமாவது, இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் முதலாயின உணரச்செய்தல் என்பது பெறப்படுகின்றது. ஆகவே, களன் என்னும் உறுப்பிற்கு இலக்கணமாவது, முல்லை குறிஞ்சி முதலாயினவும் இரவுக்குறி முதலாயினவும் தன்மை முதலாயினவும் உணரச்செய்த லெனவும், இயற்கைப் புணர்ச்சி முதலிய கரும நிகழ்ச்சியை உணரச்செய்த லெனவும் ஈரிடத்தும் வேறு வேறாகக் காணப் படுதலின் இவற்றுள் கொள்ளத்தக்கது யாதோ என்னும் ஐயந்தோன்றுதல் இயல்பே யாம். இங்ஙனம் உரை மாறுபாட்டால் ஐயநிகழுங்கால், இவற்றுள் நூலாசிரியர் கருத்து யாதாகலாம் என மூல சூத்திரத்தை உற்றுநோக்குதல் வேண்டும். அங்ஙனம் நோக்குங் கால், முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்த ஆசிரியர் தொல்

காப்பியர் "ஒருநெறிப் பட்டாங்கு ஓரியல் முடியுங், கரும நிகழ்ச்சி யிடமென மொழிப" என்னுஞ் சூத்திரத்தால், பலவும் ஒரு வழிப்பட்டு ஓரிலக்கணத்தால் முடியும் கரும நிகழ்ச்சியே இடமெனவும், இது முதனூலாசிரியர்க்கும் தமக்கும் ஒத்த கருத்து என்பது தோன்ற "மொழிப" எனவும் விதந்து கூறியிருப்பது தெரியலாம். அச் சிறப்புச் சூத்திரத்திற்கேற்ப அங்கு அவ்வாறு உரை வகுத்த சீர்சால்புலமைப் பேராசிரியரே இங்கு இவ்வாறு எழுதியுள்ளாரெனின், இவ்விரண்டனையும் இயைத்துப் பொருள்கோடல் ஏற்புடைத்து. அஃதாவது, முல்லை குறிஞ்சி முதலிய முத்திறத்தனவும், இயற்கைப் புணர்ச்சி முதலிய கரும நிகழ்ச்சியும் தம்முள் இயைதல் வேண்டுமென்பது. இயையுமாயின் ஈரிடத்து இரு வேறுவகையாக எழுதியிருப்பதும் பொருந்துவதாகும்.

முல்லை குறிஞ்சி யென்பவற்றிற்கு நிலம் ஒழுக்கம் என்னும் இரண்டும் பொருளென்ப ஆதலின், ஈண்டு நிலமெனக் கொள்ளலாமெனின் "நிலமாயின முன்னர்த் திணையெனப்பட்டன" என அப்பொருள் இவரால் விலக்கப்பட்டது. இனி, அதனை யொழித்து இருத்தல் முதலிய ஒழுக்கமெனக் கொள்ளலாமெனின்,

"கைக்கிளை முதலா எழுபெருந் திணையும்
முற்கிளந் தனவே முறைநெறி வகையின்" (பக். 1249)

என்னுந் திணையுறுப்பிற்கு இலக்கண முணர்த்திய சூத்திர உரையில், கைக்கிளை முதலிய அகத்திணை யேழும், வெட்சி முதலிய புறத்திணை யேழும், இவற்றுக்குப் பொதுவாகிய கரந்தையும் ஆகிய பதினைந்து திணையுள் ஒன்று செய்யுட்கு உறுப்பாகி வரல் வேண்டுமென்பது ஆசிரியர் கருத்து என்பது தோன்ற இவரே விளக்கி யெழுதியிருக்கின்றார், அதனோடும் அமையாது, பின்னர், காலம் என்னும் செய்யுளுறுப்பின் இலக்கணங் கூறுமிடத்தும் "முதலுங் கருவும் உரிப்பொருளுங் கூட்டித் திணையாம்" எனவும் எழுதாநிற்பர். ஆகவே முல்லை குறிஞ்சி முதலியன, நிலமெனக் கொண்டாலும் ஒழுக்கமெனக் கொண்டாலும் திணையென்னும் பிறிதோருறுப்பினுள் அடங்குமன்றிக் களனென்னும் உறுப்பினுள் அடங்காவென்பது நன்கு தெளியப்பட்டது.

அன்றியும், "ஒருநெறிப் பட்டாங்கு" என்னுஞ் சூத்திரவுரையில் "கரும நிகழ்ச்சி யென்பது காமப்புணர்ச்சி யென்னும் செயப்படுபொருள் நிகழ்ச்சி. அஃது இடமெனப்பட்டது. இது வினை செய்யிடம். நிலமாயின முன்னர்த் திணையெனப் பட்டன. காலம் முன்னர்ச் சொல்லுதும்" என எழுதியிருப்பது, சொல்லதிகாரத்து ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற "வினைசெய்யிடத்தின் நிலத்திற் காலத்தின், அனைவகைக்குறிப்பிற் றோன்றுமதுவே" என்னுஞ் சூத்திரப்பொருளை நினைவிற்கொண்டு பேராசிரியரால் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. ஆதலால் ஈண்டுக் கரும நிகழ்ச்சி யென்பது 'தட்டுப்புடைக்கண் வந்தான்' 'பொருதற்கண் மழை பெய்தது' 'சூதாடற் கட்கேகம் வந்தது' என்புழிப்போலத் தொழிலே இடமாயிற்று எனக்கோடல் அவர் கருத்து என்னலாம். பிற ஆசிரியர் கருத்துக்கள் இவ்வுரையுடன்

ஒத்தும் ஒவ்வாதும் இருக்கலாம். அவை யீண்டு ஆராயத்தக்கனவல்ல.* ஆயினும் நச்சினர்க்கினியர் "களன் என்றது இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் முதலியன உணரச்செய்தல்" என்றே அம்முதற் சூத்திரவுரையிற் குறிப்பெழுதி, பின்னர்ச் சிறப்புச் சூத்திர உரையிலும் இக்கருத்தையே விளக்கியுள்ளார். இது நோக்கத்தக்கது. இதுகாறுங் கூறியவாற்றால், முல்லை குறிஞ்சி முதலாயின, திணை யென்னும் பிறிதோருறுப்பினுள் அடங்குமென்பது பெறப்பட்டது. இனி, இரவுக்குறி முதலியன இயற்கைப் புணர்ச்சி முதலியவற்றின் பகுதியாயடங்குதலின் வேறு இடமெனப்படாவென்பதும், தன்மை முதலிய மூவிடங்களே† இங்குக்கூறிய களனு மாயின்,

அவற்றுள்,

"மாத்திரை யளவும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்" (செய்யுளியல் சூ. 2)

"கைக்கிளை முதலா வெழுபெருந் திணையும்
முற்கிளந் தனவே முறைநெறி வகையின்" (,, சூ. 184)

"எண்வகை யியல்நெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவின ததுவே"
(மெய்ப்பாடு) (செய்யுளியல் சூ. 205)

என்றவிடங்களிற் போலச் சிறப்புச் சூத்திரத்து அவற்றைச் சுட்டியேனும், விதந் தெடுத்தேனும் ஆசிரியர் கூறியிருப்பர். அங்ஙனங் கூறாமையான் அவை களன் என்னும் உறுப்பாகாவென்பதும், அதுதான், இயற்கைப் புணர்ச்சி முதலிய கரும நிகழ்ச்சியை யுணரச்செய்த லென்பதும், மேல் வினைசெய்யிடமென்றதும் இக்கள னென்றதும் ஒன்றெனக் கோடல் பேராசிரியர் கருத்தென்பதும் பெறப்படும். ஆதலால், சிறப்பிலக்கணங் கூறிய சூத்திரத்துக்கும் அதன் உரைக்கும் மாறாகப் பேராசிரியரே ஈண்டு இவ்வாறு எழுதினரென்பது கல்வி வல்லார் கருத்தூன்றிப் பார்க்கத்தக்கதாகும்.

2. காலம். "காலவகையென்பது சிறுபொழுது பெரும்பொழுது என்னுங் காலப்பகுதி முதலாயின" என்பது முதற் சூத்திரத்தின்கீழ்ப் பேராசிரியரால் எழுதப் பட்ட குறிப்பாகும். (பக். 918).

பின்னர்,

"இறப்பே நிகழ்வே யெதிர தென்னும்
திறத்தியல் மருங்கிற் றெரிந்தன ருள்ளப்
பொருள்நிகழ் வுரைப்பது கால மாகும்" (பக். 1268)

---

* திணை—"ஒழுகலாறு நிகழ்ந்த இடத்தினையும் திணையென்றார். அவை குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தலென ஐந்து வகைப்படும். அவை அறியுமிடத்து முதல் கரு உரிப்பொருள்பற்றி அறியப்படும். (இறையனர் கள-சூ-56-உரை)

† இடம்—"ஒருவர் கூற ஒருவர் கேட்ட இடம். அவை தன்மை முன்னிலை படர்க்கை யென்பன." (களவியல்-சூ-56-உரை)

என்னும் சிறப்பிலக்கணங் கூறும் சூத்திர உரையில் "மூன்று காலத்தினும் நிகழ்கின்ற நிகழ்ச்சி அச் செய்யுளுள் தோன்றச் செய்யிற் காலமென்னும் உறுப்பாம்" "பெரும் பொழுது சிறுபொழுது என்பன ஈண்டுத் திணையெனப்பட்டு அடங்கின. என்னை? முதலுங் கருவும் உரிப்பொருளுங் கூட்டித் திணையாகலின்" என்று அவரே யெழுதி யிருக்கின்றார். இவ்விடத்தும், சிறப்புச் சூத்திரக் கருத்துக்கும் அதனைத் தழுவி யெழுதிய அவருரைக்கும் மாறான குறிப்புக் காணப்படுவது பொருந்துமா என்பது ஆராய்தற் குரியதாம். நச்சினார்க்கினியர் "காலவகை யென்றது முக்காலத்தும் திணைநிகழ்ச்சிக் கண்ணே பொருள் நிகழ்ச்சி புணரக் கூறல்" என முதற் சூத்திர உரையிலும், "பெரும்பொழுதும் சிறுபொழுதும் முதல் கருஉரிப்பொருளொடுகூடித் திணையாகலின் இக்காலம் அவற்றின் வேறாம்" எனச் சிறப்புச் சூத்திர உரையிலும் எழுதியிருத்தல் ஈண்டு நோக்கத்தக்கது.

3. தளையென்பதோர் உறுப்புத் தொல்காப்பியனார் கூறாமைக்குக் காரணங் காட்டுமுகமாக நீண்டதோர் ஆராய்ச்சியுரை எழுதி வருமிடத்தில (பக். 922)

"இணைநூல் முடிபு தன்னூல் மேற்றே"

என்பதனாற் காக்கை பாடினியார் ஓதிய தளையிலக்கணம் ஈண்டுங் கோடல்வேண்டு மெனின், அதுவே கருத்தாயின் அவர்க்கும் இவர் முடிவேபற்றித் தளைகளையல் வேண்டும். அல்லதூஉம் அவர்க்கு இளையரான காக்கைபாடினியார் தளைகொண்டிலரென் பது இதனாற் பெற்றாம். தளைவேண்டினார் பிற்காலத்து ஓராசிரியரென்பது; என்னை?

"வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதி னுண்மை வாலிதின் விரிப்பின்"

எனக்கூறி, வடவேங்கடந் தென்குமரியெனப் பனம்பாரனார் கூறியவாற்றானே எல்லை கொண்டார் காக்கை பாடினியார், ஒழிந்த காக்கை பாடினியத்து,

"வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்"

எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவர் குமரியாறுள்ள காலத்தாரல்லரென்பதூஉம், குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவதன்றென்பதூஉம் பெற்றாம்; பெறவே, அவர் இவரோடு ஒரு சாலை மாணாக்கரல்லரென்பது எல்லார்க்கும் உணரல் வேண்டுமென்பது" என்று பேராசிரியர் எழுதியுள்ளார்.

இவற்றால் அறியப்படுவன, காக்கை பாடினியார் என்னும் பெயருடையார் இருவரிருந்தனரென்பதும், இருவரும் வேறு வேறு செய்யுளிலக்கணம் செய்துள்ளாரென்பதும், அவருள் ஒருவர் குமரியாறு கடல் கொள்ளப்படுமுன்பே தொல்காப்பியனாருடன் ஒருங்கிருந்து கல்வி பயின்றவரென்பதும், மற்றவர் கடல் கோட்குப்பின் இருந்தவ

ரென்று தெரிதலால் அவரோடு ஒரு சாலை மாணாக்கரல்லரென்பதும் பிறவுமாம். இவருள் தளையுறப்புவேண்டினார் யார் வேண்டாதார் யாரென்பது ஈண்டுத் தெளிதற்குரியது. காக்கை பாடினியார் தளை யிலக்கணம் ஓதினாரென்றும், இளையரான காக்கைபாடினியார் தளையுறப்புக்கொண்டிலரென்றும், தளை வேண்டினார் பிற்காலத்து ஓராசிரியரென்றும் உரையிற் காணப்படுகின்றன. தளைவேண்டினார் பிற்காலத்து ஓராசிரியரென்பதற்கு, இவ்விருவருமல்லாத வேறோராசிரியரெனக்கொள்ளின், காக்கை பாடினியார் இருவரையும் விதந்தெடுத்துக் கூறுதலும், காக்கை பாடினியார் தளையிலக்கணம் ஓதினாரென்றலும் பயனில் கூற்றாய் முடியும். அன்றி, இளையரான காக்கை பாடினியாரென்றதும் பிற்காலத்து ஓராசிரியரென்றதும் ஒருவரையே குறிப்பதாகக் கொண்டு, இளையரான பிற்காலத்துக் காக்கை பாடினியார் தளை வேண்டினாரெனக் கொள்ளின், அவர் தளையுறப்புக்கொண்டிலர் என்றெழுதியிருப்பது பொருந்தாது. ஆகவே, எப்படியும் இவ்வுரையிற் சிறிது மாறுபாடுண்டென்பது தெரியலாம். பேராசிரியர் உரைப்போக்கிலிருந்து தெரிவன யாவையெனின், தொல்காப்பியர் காலத்துக் காக்கை பாடினியார் தளையைத் தனியுறப்பாகக் கூறவில்லையென்பதும், பிற்காலத்துக் காக்கை பாடினியார் கூறினாரென்பதுமாம். இதற்கேற்ப அவ்வுரையில், "சிறுகாக்கை பாடினியார் ஓதிய தளையிலக்கணம் ஈண்டுங் கோடல்வேண்டுமெனின், அதுவே கருத்தாயின் அவர்க்கும் இவர் முடிவேபற்றித் தளைகளையல்வேண்டும். அல்லதூஉம் அவர்க்கு முன்னோரான காக்கைபாடினியார் தளைகொண்டிலரென்பது இதனாற் (இணை நூல் முடிபு தன்னூல் மேற்றே என்றதனால் அல்லது சிறுகாக்கைபாடினியார் என்று கூறியதனால்) பெற்றாம். தளைவேண்டினார் பிற்காலத்து ஓராசிரியர் என்பது" என்பது போன்றதோர் உரைநடையிருப்பின், முன்னும் பின்னுமுள்ள உரைப்பகுதியுடன் மாறுபாடின்றிப் பொருந்தும். இதன்கண், தளைவேண்டினார் பிற்காலத்தோராசிரியரென்பதற்கு, காக்கைபாடினியாரென்னும் பெயருடன் பிற்காலத்திருந்த ஓராசிரியர்; அவர் சிறுகாக்கை பாடினியார்; அவரே தளை வேண்டினார் எனக்கொள்வது பொருத்தமாம். இராவ் பஹதூர் S. பவானந்தம் பிள்ளையவர்கள் வெளியிட்ட பழம் பதிப்பில் "காக்கைபாடினியார் ஓதிய தளையிலக்கணம் ஈண்டுங் கோடல்வேண்டுமெனின், அஃதே கருத்தாயின் இவர்க்கும் அவர் முடிவேபற்றித் தளைதளையல் வேண்டும்" எனக் காணப்படுகின்றது. அதுவும் முன்பின் உள்ள உரைப்பகுதியுடன் இயையாதென்பதை நோக்கி யுணரலாம். "தொல்காப்பியரோடு ஒரு சாலை மாணாக்கராகிய காக்கை பாடினியாரும் உறப்பென்னார்; பின்தோன்றிய காக்கை பாடினியார் முதலியோர் கொள்வர்; அது பொருந்தாது" என்பர் நச்சினார்க்கினியர்.

இனி, யாப்பருங்கலவிருத்தியில் தளையுறப்புக்கூறும் அதிகாரத்தில் "தன்சீரிறுதி நிரையொடு நேர்வரின்" என்னுஞ் சூத்திர உரையில், காக்கை பாடினியார் சிறுகாக்கை பாடினியார் என்னும் இருவர் சூத்திரங்களும் தளைவிகற்பங் கூறுவனவாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளனவேயெனின், அங்குக் காக்கை பாடினியார் பெயரால் எடுத்தாண்ட சூத்திரங்கள் அவரியற்றியனவல்ல என்பதே நம் பேராசிரியர் கருத்தெனக்கொள்ளுதல் வேண்டும்.

4. "அளபெடை யசைநிலையாகலும் உரித்தே" (பக். 959)

என்னும் சூத்திரவுரையில் 'ஆஅழி' யென்பது ஈரெழுத்துப் பாதிரியாம். 'வடாஅ' என 'மூவெழுத்துப் புளிமாவாம்' என்னுமிடத்தில் 'ஆஅழி' என்பது மூவெழுத்துப் பாதிரியாம் என்றிருக்கவேண்டும்.

5. "அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே" (பக். 996)

என்னும் சூத்திரத்தின்கீழ் "மாத்திரை முதலியவற்றை உறுப்புக்களால் இத்துணை மாத்திரை கொண்டது செய்யுளென்றானும் இத்துணை அசையுஞ் சீருந்தொடையுங் கொண்டது செய்யுளென்றானும் அளவியல்கூறிய உறுப்புக்களால் வரையறுக்கப்படா" என்றெழுதப்பட்டுள்ள உரைநடை வழுவுடையதாகவுங் கூறியது கூறலாகவுங் காணப் படுகின்றது. இது, மாத்திரை முதலிய உறுப்புக்களால் இத்துணை மாத்திரை கொண்டது செய்யுளென்றானும் இத்துணை அசையுஞ் சீருந்தொடையுங் கொண்டது செய்யுளென்றானும் வரையறுக்கப்படா என்றிருப்பின் திருத்தமுடையதாகும்.

6. "எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலும் இல்லென மொழிப" (பக். 1003)

என்னும் சூத்திரத்திற்குப் பொருளெழுதுங்கால், "ஒரு சீர் இரண்டு முதற் பதினெட் டெழுகப் பல நிலைமைப்பட்டுப் பல சீராகிச் செய்யுளுள் வருமாற்றால் தத்தம் எழுத்துக் குறைந்தும் மிகுந்தும் அளவிறப்பினும்..........சுருங்கிற்றும் பெருகிற்றுமில்லை" என்றிவ்வாறெழுதப்பட்டுள்ளது.

ஒரு சீர் பல நிலைமைப்பட்டுப் பல சீராகி வருதலில் ஏனைய சீர்களினும் வஞ்சியுரிச்சீரேபயின்று வரும். வஞ்சியுரிச்சீர் அறுபதில் இருநிலைமைப்படுஞ்சீர்கள் 24. நான்கு நிலைமைப்படுவன 28. எட்டு நிலைமைப்படுவன 8. ஆகவஞ்சியுரிச்சீர் இரு நூற்று இருபத்துநான்கெனப்படும் என 1005, 6, 7-ஆம் பக்கங்களில் இவற்றிற்கு உதாரணவாய்பாடுகள் காட்டி விளக்கப்பட்டுள்ளன. இவற்றால் வஞ்சியுரிச்சீர்கள் இருநிலையும், நான்குநிலையும் எட்டுநிலையும் படுவன படுமன்றி இதற்குமேற்படுநிலைமை யெய்துதலில்லையென்று தெரிதலால், முன்பு,

"ஒரு சீர் இரண்டு முதற் பதினெட்டெழுகப் பல நிலைமைப்பட்டுப் பல சீராகி" என்றிருப்பது, ஒரு சீர் இரண்டு முதல் எட்டெழுகப் பல நிலைமைப்பட்டுப் பல சீராகி என்றிருக்கவேண்டும்.

7. இருநிலைமைப் படுஞ்சீர்கள் இருபத்து நான்கும்
காட்டிய வரிசையில் 'புலிவருவாய்' (பக். 1005)

என ஒரு சீர் காணப்படுகிறது. இது வெண்பாவுரிச்சீர் ஆகலானும், இருநிலைமைப்படுந் தன்மை இதற்கில்லையென முன்னரே (பக். 1004) விலக்கப்பட்டமையானும் அவ் விடத்து 'புலி வழங்குவாய்' என்றிருப்பது பொருந்தும். அதுவே புலி வழங்குவாய், புலி விரவுவாய் என இருநிலைமைப்படுதற்கு ஏற்றதாகும்.

8. "மேற் சீர்தளை இருநிலைமைப் படுத்த அதிகாரத்தான்"
(பக். 1008)

என்றிருப்பதில், 'சீர்தளை' என்பது சீர்களை என்றிருக்கவேண்டும்.

9. "முதலும் முடிவும் பதின்மூன்றும் பதினேழுமாகி
ஈரெழுத்துப் பாதிரி ஐந்தடி யுறழ்ந்தவாறு" (பக். 1023)

என்ற விடத்து, 'ஈரெழுத்துப் பாதிரி' என்றிருப்பது ஈரெழுத்து ஞாயிறு என்றிருப்பின் முன்னும் பின்னுமுள்ள கருத்துக்களோடு பொருந்துவதாகும்.

10. 'களிறுபோகுவாய்' என்பது முதலாக,
'களிறுசெல் கடறு' (பக்.-1035)

என்பது ஈறுகப் பதினைந்து வாய்பாடுகள் காட்டி, "இவை பதினைந்தும் ஏழெழுத்தாங்கால் உறழ் நிலையிலவெனப்படும்" என்றெழுதப்பட்டுள்ளது. இவற்றுள் 'களிறு போகுவாய்' 'மாவழங்கு சுரம்' என்னும் இரண்டும் ஏழெழுத்தாந் தன்மை எவ்வாற்றானும் ஏலாவாகலின், அவற்றை விலக்கி, பாம்பு வழங்குசுரம், புலி வருகடறு என்னும் இவையிரண்டனையும் ஏனையவற்றுடன் சேர்த்துக் கோடல்வேண்டும்.

11. "களிறு வழங்குகாடு, பாம்பு வழங்குகடறு,
களிறு போகுகடறு" (பக். 1036)

என இவை மூன்று சீரும் ஒரோவொன்று ஏழெழுத்துச் சீர் மூன்றும் எட்டெழுத்துச் சீர் ஒன்றுமாக முந்நான்கு பன்னிரண்டும் உறழ்நிலை யில எனப்படும்; அவை:

களிறு விரவுகாவு, களிறு வழங்குகுரவு, அரவு விரவுகாடு, அரவு விரவுகுரவு என ஏழெழுத்துச் சீர் மூன்றும் எட்டெழுத்துச் சீரொன்றும் ஆயினவாறு கண்டு கொள்க. ஒழிந்தனவும் அவ்வாறே கொள்க" என்று காணப்படுகின்றது.

இவற்றுள், களிறு வழங்குகாடு என்பது நிரைபுநிரைபு நேர்பு என்ற சீராகும். இச்சீரொன்றே ஏழெழுத்துச் சீர் மூன்றும் எட்டெழுத்துச் சீர் ஒன்றுமாக நான்கு நிலைமைப்பட்டதற்கு வாய்பாடுகளை விகற்பித்துக் காட்டி, ஏனைய இரண்டும் அவ்வாறே கொள்க என்பது பேராசிரியர் கருத்து. இங்குக் காட்டியவற்றில் அம்முறை பிறழ்ந்திருப்பதுமன்றி ஒன்பதெழுத்துச் சீரொன்றும் விரவியுள்ளது. இது, களிறு விரவுகாவு, அரவு வழங்குகாவு, அரவு விரவுகாடு, அரவு விரவுகாவு என இருப்பிற் பொருத்தமாம்.

12. "நேரீற் றியற்சீர் நிரையும் நிரைபும்
சீரேற் றிறாஉம் இயற்கைய வென்ப" (பக். 1057)

என்னும் சூத்திரத்தின்கீழ், "இது மேற்கூறப்பட்ட இயற்சீர் நான்கும் வருங்கால் இன்னுழிநின்று இன்னவாறு கொள்ளப்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று" என்றெழுதப்பட்டுள்ளது. வெண்பாவின் ஈற்றடியில் நேரிறுதியாகிய இயற்சீரின் பின்

நிரை, நிரைபு என்னும் அசையிரண்டும் சீராகவந்து நிற்கும் என்பதே இச்சூத்திரக் கருத்து. அடுத்த சூத்திரத்தில் நிரையீற்று இயற்சீரின் பின் நேர், நேர்பு என்னும் அசையிரண்டும் சீராகவரும் என்று கூறப்பட்டுள்ளது. ஆதலால், உரையில் 'இயற்சீர் நான்கும் என்றிருப்பது அசைச்சீர் நான்கும் என இருத்தல்வேண்டும்.

13. "குறித்தபொருள்" (பக். 1061-62)

என்ற மூலத்திற்கு 'அவ்வடியில் தான்வைக்கக் கருதிய பொருளைப் பிறிதோரடியுங் கொண்டு கூட்டாது அமைந்து மாறச் செய்தல்" என்று விசேடவுரை வரையப் பட்டுள்ளது. இவ்விசேடத்திற்கேற்ப, "குறித்த பொருளை முடிய நாட்டல்" என் பதுவரை சூத்திரப்பகுதி அங்கு எடுத்துக் காட்டப்படவேண்டும்.

14. "அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை" (பக். 1077)

இச் சூத்திரத்திற்கு

"அடிதோறும் முதற்கண் ஓரெழுத்தேவரத்
தொடுப்பது மோனைத் தொடையாம்"

என்று பொருளும்,

"கண்டற் கானற் குருகின மொலிப்பத்
திரைபா டவியத் திமில்தொழில் மறப்பக்
கரையா டலவன் அளைவயிற் செறிய"

என்பது, அடிதோறும் முதலெழுத்தொன்றி மோனைத் தொடை வந்தவாறு" என்று உதாரணமும் விளக்கமுங் காணப்படுகின்றன.

இப்பாடற் பகுதி "மண்டில மழுங்க" என்று தொடங்கிப் பதினைந்து அடிகளால் முற்றுப்பெற்ற இருநூற்று அறுபதாம் அகப்பாட்டின் இடைப்பட்ட 3, 4, 5-ஆம் அடிகளாகும். அங்குத் 'தகையாடலவன் அளைவயிற் செறிய' என்ற பாடமே யுள்ளது. எவ்வாற்றானும் இப்பகுதி அடிதொறும் தலையெழுத்தொன்றிவந்த மோனைத் தொடைக்கு எடுத்துக் காட்டாதல் பொருந்துமாறில்லை.

15. "வலியது கடியாறு காருருமு பாதிரி" (பக். 1079)

என்றது, பதினன்கெழுத்தடிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுளது. குற்றுகர நீக்கி யெண்ணுங்கால் பதின் மூன்றெழுத்துக்களே இதன்கட் காணப்படுதலால் "வலியது காருருமு காருருமு பாதிரி" யென்றிருக்கவேண்டும்.

16. "இனி, களையப்படாதநிரை முதற் சீர்ஒன்பா
னுள்ளும் சுருங்கிய எழுத்துச் சீர்ஒன்பது" (பக். 1079)

என்றெழுதப்பட்டுள்ளது. இதில் சுருங்கிய எழுத்துச் சீர் ஏழு என்றிருக்கவேண்டும்.

(இன்னும் வரும்)

ஸ்ரீ

புறநானூற்றுத் தொகுப்பு முறை

வித்வான் - A. பூவராகம் பிள்ளை எழுதியது

புறநானூற்றுச் செய்யுட்கள் அகநானூறுபோல எண்ணுமுறையிலாதல், ஐங்குறுநூறு, கலித்தொகைபோலப் பொருள் பற்றியாதல், பதிற்றுப்பத்துப்போலப் பாடப்பட்டோர் பாடினோர் பற்றியாதல் ஒரு முறைப் படத்தொகுக்கப்பட்டில. ஆயினும் இச்செய்யுட்களைத் தொகுத்தவர் சில முறைகளைக்கொண்டு வரிசைப்படுத்தி யுள்ளார் என்பதுமட்டும் புலனாகின்றது.

முதற் பாட்டுக் கடவுள் வாழ்த்து நீங்கலாக (1) 2 முதல் 86 வரை முடிகெழு வேந்தர் மூவரைப்பற்றிய பாடல்களாக உள்ளன. (2) 87 முதல் 181 வரை வள்ளல் எழுவரும் பிறருமாகிய குறுநில மன்னர்களைப் பற்றிய பாக்களாக உள்ளன. (3) 182 முதல் 195 வரை ஒருவரை நோக்கி ஒருவர் பாடியனவாக இன்றிப் பொதுவாகப் பாடப்பட்ட சில நீதிச் செய்யுட்களாக உள்ளன. (4) 196 முதல் 211 வரை பரிசில் நீட்டித்தல் முதலிய குறைபாடுகள் பற்றிய செய்யுட்கள் சேர்க்கப்பட்டுள்ளன. (5) 212 முதல் 256 வரை இறந்தோரை நோக்கி அவர் உறவினரும் புலவரும் இரங்கியுரைத்தல் முதலிய இரங்கற்பாக்கள் உள்ளன. (6) 257 முதல் 335 வரை முடியுடை வேந்தரும் குறுநில மன்னருமன்றித் தனிப்பட்ட சில வீரர்களின் சிறப்பும், குதிரைமறம் முதலியனவும் பற்றிய பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. (7) 336 முதல் 354 வரை மகட்பாற் காஞ்சி என்னும் துறைபற்றிய செய்யுட்கள் தொகுக்கப் பட்டுள்ளன. (8) 355, 356 காடுவாழ்த்தாகத் தோன்றுகின்றன. (9) 357 முதல் 400 வரை உள்ளபாக்கள் ஒரு நெறிப்படாமல் விரவியுள்ளன.

(1) 2 முதல் 16 வரையில் உள்ள 15 பாடல்கள் சேரன், பாண்டியன், சோழன் என்ற வரிசையில் ஒவ்வொருவரைப்பற்றி ஒவ்வொன்றாக ஐந்து முறை அடுத்தடுத்து வைத்துள்ளனர். இதனால் இதனைத் தொகுத்தவர் மூவேந்தரையும் ஒப்பமதிக்கும் நடுநிலையுடையர் என்பது தெளிவாகும். சேரன், பாண்டியன், சோழன் என்ற வரிசை

> "போந்தை வேம்பே ஆரென வரூஉம்
> மாபெருந்தானையர் மலைந்தபூவும்"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தினின்றும் மேற்கொண்டனராவர். இப்புறநானூறு 338-ம் பாடலில்

> "வேம்பும் ஆரும் போந்தையுமூன்றும்
> மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்"

எனப் பாண்டியன், சோழன், சேரன் என்று முறை கூறப்பட்டிருப்பினும், தொன்னூலாகவும் இலக்கணமாகவும் உள்ள தொல்காப்பிய முறையையே மேற்கொண்டன ரெனக்கொள்க. மேல் 80 முதல் 86 வரையுள்ள ஏழுபாடல்கள் சோழன் போர்வைக்

கோப் பெருநற் கிள்ளியைப் பற்றியனவாக உள்ளன. மற்று 17 முதல் 79 வரை உள்ள 63 பாடல் ஒரு நெறிப்படாமல் விரவியுள்ளன. இவற்றுள் 71 முதல் 75 வரை உள்ள 5 பாடல்கள் அரசர் பாடியனவாக இருத்தல் கருதத்தக்கதாகும்.

(2) 87 முதல் 153 வரை வள்ளல் எழுவரைப் பற்றிய பாடல்களாகும். இவ் வெழுவரையும் 158-ம் பாடலில் பெருஞ்சித்திரனார் கூறியபடி வேள்பாரி, வல்வில் ஓரி, மலையமான் திருமுடிக்காரி, அதிகமானெடுமானஞ்சி, வையாவிக் கோப்பெரும் பேகன், வேள் ஆய், கண்டீரக் கோப் பெருநள்ளி என்ற முறையிலாதல், சிறுபாணாற்றுப் படையிற் கூறியபடி பேகன், பாரி, காரி, ஆய், அதிகமான், நள்ளி, ஓரி என்ற முறையி லாதல் வரிசைப்படுத்தாமல் இந்நூற் றொகுப்பாசிரியர் வேறொரு முறையில் அதிக மான், பாரி, காரி, ஆய், பேகன், நள்ளி, ஓரி என்று வரிசைப்படுத்தியுள்ளனர்.

அதிகமான், தான் அரிதின் முயன்று பெற்றதும் உண்டவர் நெடுங்காலம் உயிர் வாழ்தற் குரியதுமாகிய அரிய நெல்லிக்கனியை ஔவையாருக்கீந்து, புலவரைத் தன்னுயிரினும் மேலாகப் போற்றிய சிறப்புப் பற்றியும், பனந்தாருடையனாய்ச் சேர மான் தொடர்புடையனாய் இருத்தல் பற்றியும் அவனை முதற்கண் வைத்தனர். பாரி, ஓரறிவுயிராகிய செடி கொடிகளிடத்தும் பேரருளுடையவனாய் முல்லைக்குத் தேர் கொடுத்தமையாலும், தன் நாட்டகத்துள்ள முந்நூறூரும் பரிசிலர்க்கீந்த பெருங் கொடையுடைமையாலும் அவனை இரண்டாமவனாக வைத்தனர். காரிபெருங் கொடை யோடு மூவேந்தரும் இவன் தத்தமக்கே போர்த்துணையாதல் வேண்டுமென்று விரும்பத் தக்கவனாய், இவனைத் துணையாகக்கொண்டு வென்ற வேந்தனும், இவனைத் துணைக் கொள்ளாது தோற்றோனும் ஒருங்குபுகழும் வீரப் பெருமையுடைமையால் காரியை மூன்றாம் எண்ணில் வைத்தனர்.

> "குன்றத் தன்ன களிறு பெயரக்
> கடந்தட்டு வென்றோனும் நிற்கூறும்மே
> வெலீஇயோனிவனெனக்
> கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
> விரைந்து வந்து சமரந்தாங்கிய
> வல்வேல் மலையனல்லனாயின்
> நல்லமர் கடத்தல் எளிதுமன் நமக்கெனத்
> தோற்றோன்றானு நிற்கூறும்மே
> தொலைஇயோனிவனென" (புறம். 125)

எனக்காரியின் வீரச்சிறப்புக் கூறப்படுதல் காண்க. நீலநாகம் நல்கியகலிங்கம் ஆலமர் கடவுட் கன்புடனீத்த பெருமைபற்றி ஆயை நான்காம் எண்ணில் வைத்தனர். பேகன் மயிலுக்குப் போர்வையீந்த பேரருளும் பெருங்கொடையு முடையனாதலின் முல்லைக்குத் தேரீந்த பாரியை அடுத்து வைத்தற் குரியனாயினும், தன் மனைவியை நீத்துப் பிறளொருத்தியை நயந்த சிறுமறு அவன் பாலுண்மை நோக்கி அவனை ஐந்தாம் எண்ணில் வைத்தனராவர். ஏனைநள்ளியையும் ஓரியையும் சிறு பாணாற்றுப்

படையிற் கூறியாங்கு இறுதியில் வைத்தனர். இவர் கொண்ட வரிசைக்கு இங்ஙனங் காரணங் கொள்ளுதல் பொருத்தமாகும். இன்றேல் புறநானூறு, சிறுபாணாற்றுப்படை இரண்டு நூல்களையும் பின்பற்றாது வேறு முறை கொண்டதற்கு வேறு காரணம் ஏதாவது இருத்தல் இன்றியமையாததாகும்.

87 முதல் 104 வரை உள்ள செய்யுட்கள் அதிகமான் நெடுமானஞ்சியைப் பற்றியனவாகும். இவற்றுள் 96, 102 இரண்டும் அவன் மகனைப் பற்றியனவாயினும் அவன் பாடல்களோடு ஒருங்கு சேர்க்கப்பட்டமை பொருத்தமேயாகும். 96-ம் பாடலில் அதிகமான் மகன் பொகுட்டெழினி பகைவரஞ்சத்தக்க வீரச்சிறப்பும் மகளிர் மனங்கவரும் எழில் நலமும் பொருந்திய காளைப்பருவ முடையவனாகக் கூறப்பட்டுள்ளான். 100-ம் பாடலில் அவன் பிறந்தபோது அதிகமான் அவனைக்கண்ட நிலைமை கூறப்பட்டுள்ளது. ஆதலின் இப்பாடல்கள் முன்பின் மாறியிருத்தல் பொருத்தமாகும்.

105 முதல் 120 வரை உள்ள செய்யுட்கள் வேள்பாரியைப் பற்றியனவாகும். இவற்றுள் 109, 110 இரண்டும் மூவேந்தரை நோக்கிக் கூறப்பட்டனவெனினும் பாரியின் சிறப்பே விளக்கினவாதலின் அவைகளும் அவன் பாடல்களோடு சேர்க்கப்பட்டன.

121 முதல் 126 வரை உள்ள செய்யுட்கள் மலையமான் திருமுடிக்காரியைப் பற்றியனவாகும். 125-வது பாடலின்கீழ்த்தேர்வண் மலையன் என்று குறிப்புக் காணப்படினும் அதுவும் மலையமான் திருமுடிக்காரியைப் பற்றியதேயாகும். 123-ம் பாடலில் அவன் தேர் வண்மையும், மலையன் என்னும் பெயரும் கூறப்படுதல் காண்க.

127 முதல் 136 வரை உள்ள பாடல்கள் வேள் ஆயைப் பற்றியனவாகும். இப்புறநானூற்றில் ஆயைப் பற்றியனவாக ஈண்டுப் பத்துப் பாடல்களும் 240, 241, 374, 375-ம் ஆகப் பதினான்கு பாடல்கள் உள்ளன. இவற்றைப் பாடிய புலவர் மூவர். இவன் நீல நாகம் நல்கியகலிங்கம் ஆலமர் கடவுட்கு அன்புடன் கொடுத்த வரலாறு ஒரு பாடலிலேனும் காணப்படவில்லை. (குமணனைப் பாடிய பெருஞ்சித்திரனாரும் "திருந்து மொழி, மோசிபாடிய ஆயும்" என்றே ஆயைக் குறிப்பிட்டனர்). சிறுபாணாற்றுப் படையிற் காணப்படும் செய்தி புறநானூற்றிற் காணப்படாமை வியப்பாக உள்ளது.

141 முதல் 147 வரை உள்ள் பாக்கள் வையாவிக் கோப்பெரும் பேகனைப் பற்றியனவாகும். 148 முதல் 151 வரை உள்ளவை கண்டீரக் கோப் பெருநள்ளியையும் 152, 153 ஆகிய இருபாடல்களும் வல்வில் ஓரியையும் பற்றியனவாகும்.

137 முதல் 140 வரை உள்ள பாக்கள் நாஞ்சில்வள்ளுவனைப் பற்றியனவாகும். இங்ஙனம் வள்ளல் எழுவரையும் பற்றித் தொடர்பாக வருமிடத்து இடையே நாஞ்சில் வள்ளுவனைப் பற்றிய பாடல்கள் வந்திருத்தலின் இவை இடம் பிறழ்ந்திருத்தல் கூடும் என்றெண்ணுகின்றேன்.

154 முதல் 181 வரையுள்ளபாக்கள் கொண்கானங் கிழான், ஏறைக்கோன், குமணன் முதலிய குறு நிலமன்னரைப் பற்றியனவாகும். இவற்றுள் 166-ம் பாடலிற்

கூறப்படும் பூஞ்சாற்றூர்க் கௌணியன் விண்ணந்தாயன் குறுநிலமன்னன் அல்லா விடினும் அத்தகையோனுகக் கருதி அப்பாடலை இத்தொகுதியிற் சேர்த்தனர் போலும்.

(3) 182 முதல் 195 வரை ஒருவர் ஒருவரைப்பற்றிப் புகழ்ந்துரைத்தல், ஒருவர்க்கு அறிவுறுத்துதல் என்றிங்ஙனமில்லாமல், பொதுவாக உலகை நோக்கி ஒவ்வொரு நீதியைக் கூறி வற்புறுத்துவனவாகவுள்ள பாக்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

(4) 196 முதல் 211 வரை, பரிசில் நீட்டித்தல், சிறிது கொடுத்தல், புலவரைக் கண்டு போற்றிக் கொடாமல் பிறர் வாயிலாகக் கொடுத்தல் முதலிய குற்றங்கண்டு அப் பரிசில்களை ஏற்றுக்கொள்ளாமல் புலவர் மறுத்துரைத்த பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 200 முதல் 202 வரையுள்ள பாடல்கள், பாரிமகளிரை மணந்து கொள்ளும்படி விச்சிக்கோனையும் இருங்கோவேளையும் கபிலர்வேண்டியுரைத்தவையாயினும், அவர் விரும்பிய குறை முடிக்கப்படாமையின் அவை தலைவர்களின் குறை பற்றிய பாடல் வரிசையில் சேர்க்கப்பட்டனவாகும்.

5. 212 முதல் 256 வரை முடிகெழுமன்னரும் குறுநிலமன்னருமாகிய இறந்தோரைப்பற்றி வருந்துவோர் கூறிய இரங்கற்பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் துறவு மேற்கொண்டு தவமுயல்வோர், வடக்கிருப்போர் முதலியவர்களைப் பற்றிய பாடல்களுமுள்ளன. இவர்கள் உலக வாழ்வை வெறுத்து அந்நிலைகளை மேற்கொண்டனராதலின் இவர்களைப்பற்றிய பாடல்களும் ஈண்டுச் சேர்க்கப்பட்டன 212, 213-ம் பாடல்கள் கோப்பெருஞ் சோழன் வடக்கிருத்தற்குமுன் கூறப்பட்டனவாயினும் பின்னுள்ள பாடல்களின் தொடர்பு நோக்கி ஈண்டுச் சேர்க்கப்பட்டனவாகும்.

(6) 257 முதல் 335 வரை முடியுடை மன்னரும் குறுநில மன்னருமன்றித் தனிப்பட்ட சில வீரர்களின் வீரம், கொடை, மறக்குடிச் சிறப்பு, தானைமறம், குதிரை மறம் பார்ப்பனவாகை என்றின்னோரன்ன பொருள்பற்றிய செய்யுட்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவை தனிப்பட்ட சில வீரர்களைக் குறித்தன என நினைத்தற்குரிய குறிப்புக்கள் பல செய்யுட்களிற் காணப்படுதலின் இத் தொகுதி முழுதும் அங்ஙனம் உள்ளவையே எனக் கோடல் பொருத்தமாகும்.

தொல் - புறத்திணை - "வெறியறி சிறப்பின்" என்ற சூத்திரத்தில் "ஆரமரோட்டல்" என்ற பகுதிக்குக் 'குறுநிலமன்னரும் காட்டகத்துவாழு மறவரும் போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங்காண்டலும்' எனப் பொருள்கூறிப் "பொன் வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின்" என்ற (புறம். 308) செய்யுள் குறுநிலமன்னனைக் குறித்ததாக நச்சினார்க்கினியர் காட்டியுள்ளனர். அப் பாடலில் 'சீறூர் மன்னன்' எனக் கூறப்பட்டிருத்தலின் அப்பாட்டுடைத் தலைவன் குறுநிலமன்னன் என அவர் கருதினர்போலும்.

இப் பகுதியில் "சீறூர் மன்னன்" என்றும், ஓரூர்க்குத் தலைவன் என்றும் சிலர் கூறப்பட்டுள்ளனரெனினும் இவர்கள்முன் அதிகமான் நெடுமானஞ்சி முதலாகக் கூறப்பட்ட குறுநிலமன்னர்போன்றவராகக் கொள்ளுதல் பொருந்தாது. இவர்கள் ஒவ்வோரூர்க்குத் தலைவர்களாகக் கூறப்படுதலானும். இப்பகுதியிலுள்ள பாடல்களில் (266,

315 இரண்டும் நீங்கலாக) ஒன்றிலேனும் பாட்டுடைத் தலைவர் பெயர் கூறப்படாமையானும், தனிப்பட்ட வீரர்களின் சிறப்பு, யானை, குதிரை, மறக்குடி இவற்றின் சிறப்பு முதலிய பல்பொருட் பாடல்களும் இப்பகுதியில் விரவியிருத்தலானும், இப்பகுதியில் ஒரூர்க்குத் தலைவராகக் கூறப்பட்டவர் குறுநிலமன்னர் தரத்தினரன்றி, அரசர்க்கு வேண்டுமிடத்து உதவிபுரியும் சில வீரர்களாகக் கொள்ளுதலே பொருத்தமாகும்.

இப்பகுதியில் 266, 315 ஆகிய இரு பாடல்களும் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியையும், அதிகமானெடுமானஞ்சியையும் குறித்தனவாக விருத்தலின், இவ்விரு பாடல்களும் எக்காரணத்தாலோ வேறிடத்திருந்து மாறி இப்பகுதியிற் சேர்ந்தனவெனக் கருதுகின்றேன்.

பலதுறைப் பாக்கள் கலந்துள்ள இப்பகுதியில் 313 முதல் 325 வரை வல்லாண் முல்லை என்ற ஒரு பொருள்பற்றியனவாகவும், 326 முதல் 335 வரை மூதின்முல்லை என்ற ஒரு பொருள் பற்றியனவாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.

(7) 336 முதல் 354 வரை அரசர் மறக்குடியினர் பெண்ணை மணக்க விரும்ப, அம்மறக் குடியினர் பெண்தர மறுக்க, அதனாற் போர் நிகழ்தலைக் குறித்த "மகட்பாற் காஞ்சி" என்னுந் துறைபற்றிய செய்யுட்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியிலுள்ள பாக்களெல்லாம் பாடப்பட்டோர் பெயரிலவாகவும், கீழ்க்குறிப்பெழுதினோரும், பாடப்பட்டோர் பெயர் கூறுது சென்றிருக்கவும், 344, 345 ஆகிய இருபாக்களின் கீழ்மட்டும் பாடப்பட்டோர் பெயர் உள்ளனபோற் கீழ்க் குறிப்புக் காணப்படுதல் பொருத்தமாகவில்லை. அன்றியும் 344-ஆம் செய்யுளிற் பாடப்பட்டோர் பெயர் காணப்பட்டிலது; 345-ஆம் செய்யுளில்

"வந்தோர் பலரே வம்ப வேந்தர்"
"அளியர் தாமே யிவள் தன்னைமாரே"

எனப் பன்மைச் சொற்களே கூறப்பட்டுள்ளன; கீழ்க்குறிப்பில் "அவனை அவர்" (அவனை அவர் பாடியது) என ஒருமைச்சொற் காணப்படுவது பொருந்தாமை காண்க. இப்பகுதிச் செய்யுட்கள் பெண்கொள வந்தோர் பெண்தர மறுப்போர் ஆகிய இருதிறத்தாரையும்பற்றி நிற்றலின், ஒருவர் பாட்டுடைத் தலைவராகக் குறித்தற்கியலாமையினால் கீழ்க்குறிப்பெழுதினோர் பெயர் கூறுதொழிந்தனர்போலும். இவற்றுள் பரணர் பாடியனவாக ஆறு செய்யுட்களிருந்தும் அவை ஒருங்கே இல்லாமல் விரவியுள்ளன.

(8) 355, 356 ஆகிய இருசெய்யுட்களும் "காடுவாழ்த்து" என்னும் துறையுடையனவாக விருக்கின்றன. 356-ஆம் செய்யுள் தொல்காப்பிய உரையில் காடுவாழ்த்தென்னுந் துறைக்கு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. அச்செய்யுளின்கீழ் "திணையும் துறையும் அவை" எனக் கூறப்பட்டிருத்தலின், சிதைந்துள்ள 355-ஆம் செய்யுளும் அத்துறைப்பொருளதெனக் கோடற்குரியதேயாம்.

(9) 357 முதல் 400 வரை ஒரு நெறிப்படாமல் முடியுடை வேந்தரையும் குறுநில மன்னரையும் பற்றியனவும், தனியே நீதிகளை யுணர்த்துவனவுமாகப் பலதிறப்பட்ட செய்யுட்கள் விரவியுள்ளன.

Reviews

Report on the marketing of Rice in India and Burma: **Pages 626.** Price: Re. 1–4–0.

A handy authoritative reference book on the marketing of rice in India and Burma has been a long felt need. The monograph of the Agricultural Marketing Adviser fulfils this need. Almost every aspect of the problem of marketing of rice has been considered in this volume. Each chapter contains a wealth of details and recommendations which will be very useful to the student, the trader in rice, the reformer and the politician.

The first chapter dealing with the supply side of rice gives an interesting history of paddy culture and a clear analysis of the different seasons for sowing, harvesting and marketing in various provinces of India and Burma. It also gives a valuable account of the different varieties of rice grown in the country, and of their three-fold classifications into (a) fine, medium or bold (coarse), (b) raw or par boiled (c) milled or hand-pounded rice. This chapter lays stress on the inadequacy of our rice supply to feed our growing population and on our regrettable dependence on foreign imports of rice.

The second chapter on "Utilisation and Demand" gives an evaluation of paddy and rice utilised for different purposes such as sowing, stock-feeding, manufacturing into products (e.g., murmura, keel; chura), for industrial uses, for export and by far the most important of all, for domestic consumption. The section on "Demand" deals with the variations in the *per capita* consumption of rice in different provinces and in the demand for various varieties of rice according to the economic status of the consumers, their age-long prejudices and " their religious susceptibilities."

The third chapter under the caption "Wholesale Prices" begins by stating that Indian prices are entirely uninfluenced by world price trends and that even within the country there is no such thing as an average price of rice due to "the existence of an enormous number of varieties, the complexities of consumers' preferences, the localisation of production types, the localised nature of demand and the non-existence

of any representative type or standards of quality." It also points out the woeful lack of organisation in the sales of paddy when compared with that of the relatively organised market for rice. The prices of rice are influenced by the main quality factors such as "(a) conformation. (fine, medium and bold), (b) raw or parboiled (c) machine milled or hand-pounded (d) variation in grade or quality, (e) age or maturity (f) artificially applied." After enumerating the methods advised by the government for the speedy dissemination of market news for the agriculturist through the radio and the press, the chapter contains a resume of the working of the Agricultural Produce (Grading and Marking) Act and of the pushing into wider use the AGMARK grades.

In Burma there is not much disparity between the paddy prices and rice prices except for some premiums paid for old crops and for "boat" paddy coming from riverain tracts. The advantages which Burma market has over the Indian market are in the limited number of grain varieties placed in the market which confirm to recognised trade standards and in the comparative efficiency of the market organisation. The only disruptive tendency in Burma is the dealing in "futures" which instead of levelling seasonal fluctuations in prices aggravates them.

The succeeding three chapters deal in great detail with the preparation of rice for the market, assembling and classification, grading and standardisation. Unlike other staples like wheat, barley and gram, paddy is not ready for consumption after the process of reaping, threshing and winnowing but it has to go through the process of de-husking either raw or after parboiling. But paddy does not travel straightway from the grower to the consumer, it passes through a long array of middlemen who collect the paddy from the grower, bring it to the assembling centre and then distribute it through middlemen to the ultimate consumers. In this process of assembling the produce and distributing it, as the chapter points out, there are involved much wastage of effort, unnecessary payments and the heavy economic loss resulting from the profiteering of a vast number of middlemen by which the actual price got by the grower for his produce is greatly depressed. Classification and grading are absent in India due to the innumerable varieties of rice grown. So the trade in rice is carried on only through a visual examination of samples of paddy and the rice contents of samples. This rough method is highly unsatisfactory and even individual attempts at standardising products through the use of trade marks will not infuse confidence in trade transactions. So the chapter lays it conclusively that full

use should be made of the Agricultural Produce (Grading and Marking) Act, 1937, and the produce should be graded according to the specifications of the Act. Already the reception of AGMARK rice in the foreign markets is very encouraging. Hence it is high time that more of the rice producers should conform to the AGMARK rules.

With Burma the problem is entirely different, her rice (un-husked paddy) being well graded by a volumevisual process. But the Burmese system is not fool-proof as attempts are usually made by dishonest buyers to use measuring baskets of varying volume on the pretext that the paddy does not conform to the standard specifications. The grading of rice (husked) is according to a "volume-cum-weight system," through a rough device and this method gives some protection to both parties.

The next four chapters on "Conservation," "Handling and Transportation," "Wholesale Distribution" and "Manufacturing and Distribution of Rice Products" apart from dealing with the respective topics exhaustively, offer some valuable recommendations. For the bulk-storage of paddy it is recommended that growers in particular areas should co-operate for starting central storage and marketing societies and thus gain an extra-profit by selling stored grains at the end of the seasonal glut. The greatest single addition to the marketing charge of rice comes under the head "freights" and any reduction of transport charges will not only expand the market for the grower in different regions but will confer a real benefit to the consumer. The operation of the "flat rate principle of rates" and "the telescopic scale of rates" in the railways have not in any way substantially reduced the handicaps for the marketing of rice. A planned and drastic reduction of rates can alone minimise the handicaps. In the distributive trade of rice there exists a host of intermediaries between the grower and the consumer whose profits consume a good portion of the money that ought to go to the cultivators. The chapter does well in pleading for "a proper system of marketing and for a more direct participation in the marketing process by the grower himself."

In India about 5·7 per cent of the total crop production (2·41 million tons) is utilised for seed. Such a large utilisation of grains for seeds is due to faulty seed selection and faulty methods of cultivation. The eleventh chapter draws our attention to the immense good that can come about by the Agricultural Departments popularising the use of seeds of improved high yielding strains. The unnecessarily large number of varieties of grains grown in India may be given up in order to faci-

litate standardisation and the specification of quality by which easy, reliable, commercial transactions may be made feasible. The absurd multiplicity of weights and measures current in the country leads to a good deal of foul play much to the detriment of the agriculturists and it gives rise to a sense of insecurity in commercial transactions. The recommendations made in chapter twelve favour the strict enforcement of the Standard of weight Act, 1939, in the provinces and the adoption of the Imperial gallon as the standard of dry measure at least in wholesale transactions.

Wherever possible explanatory diagrams and photographs are given. The appendices supply statistical data and information about the marketing acts in the country and practices obtaining elsewhere. The volume is a welcome addition to the long list of publications which the Agricultural Marketing Department has to its credit.

B. V. NARAYANASWAMY.

Report on the marketing of Groundnut in India and Burma: pages 446. Price Rs. 1–4–0.

Among the groundnut producing countries of the world India comes first both as to the area under groundnut cultivation and as to the quantity produced. The average acreage and production during 1933 to 1937 were 7 million acres (36% of the world acreage) and 2·82 million tons (34 per cent of the world production). About 40 per cent of the total production enter into internationl trade, the chief customers in the order of importance in the pre-war days being France, the Netherlands, the United Kingdom, Germany and Italy. India ranks first in the export of groundnut kernels and the average value of exports during 1933-34 to 1937–38 was 11 crores of rupees. Hence the importance of the study on marketing of this cash crop.

The first chapter contains a description of the chief varieties of groundnuts grown in India, the sowing, harvesting and marketing seasons of the crop and the outlets for the surplus kernels and oil cake. According to the second chapter, groundnuts are put to three different uses (for seeds, for edible purposes and, most important of all, for extracting oil). The demand for groundnut oil is an example of composite demand. So the actual quantity of the produce demanded is necessarily regulated by the relative prices of vegetable oils, animal fats and margarine and also by the size of the Indian crop. Peanuts and Coroman-

